பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 15 புதன்கிழமை (28.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 183

# பயங்கரவாதத்தை ஒழிக்கும் வரை ஓயோம் என ஜனாதிபதி சூளுரை!

## மீண்டும் இனக்கலவரத்துக்கு இடமளிக்கமாட்டார் என்கிறார்

கொழும்பு, மே 28

**இந்த நாட்டிலிருந்து பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிக்கும் தமது அரசின் முயற்சி எந்தச் சமயத்திலும் நிறுத்தப்பட மாட்டாது என்று உறுதிபடத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பயங்கரவாதத்தை இந்த நாட்டிலிருந்து பூண்டோடு ஒழிக்கும்வரை தாம் ஓயமாட்டார் என்றும் சூளுரைத்தார்.**

தெற்கில் அப்பாவிப் பொதுமக்களை இலக்குவைத்து கொடூரக் குண்டுத் தாக்குதல்களை நடத்துவதன் மூலம், தெற்கில் மீண்டும் ஒரு தடவை 1983 இல் நடந்தது போன்ற இனக் கலவரத்தை ஏற்படுத்தப் பயங்கரவாதிகள் முயற்சிக்கின்றனர் என்று குற்றம் சுமத்திய அவர், அந்த முயற்சிக்குத் தனது அரசு இடமளிக்க மாட்டாது எனவும் திட

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நிறுவனம் டீசல் விலையை உயர்த்தியது

கொழும்பு, மே28

இலங்கை இந்திய எரிபொருள் நிறுவனம், டீசல் விலையை லீற்றருக்கு மேலும் 20 ரூபாவால் அதிகரித்துள்ளது.

நேற்று நள்ளிரவில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் குண்டுவெடிப்பு: உயிரிழப்பு 10ஆக உயர்வு

கொழும்பு, மே 28

தெஹிவளை, ரயில் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை பத்தாக அதிகரித்திருக்கிறது.

சம்பவத்தில் படுகாயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட ஒருவர் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் பொதி ஒன்றில்இருந்த குண்டே வெடித்தது என்றும், சம்பவம் தொடர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் - முஸ்லிம் இனக்கலவரத்தை கிழக்கில் மஹிந்த அரசே தூண்டி விட்டிருக்கிறது

### ஜே.வி.பி. தேசிய மாநாட்டில் செயலாளர் ரில்வின்

கொழும்பு, மே 28

கிழக்கில் தமிழ் - முஸ்லிம்களுக்கிடையில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசே இனக் கலவரத்தைத் தூண்டிவிட்டிருக்கிறது என்று குற்றம் சுமத்தியிருக்கும் ஜே.வி.பி., இந்த அரசை வீழ்த்தி மிக விரைவில் நாட்டுக்குப் பொருத்தமான - மக்களின் உரிமையைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய - அரசை உருவாக்கப்போவதாகவும் அறிவித்துள்ளது.

கொழும்பு, சுகததாஸ உள்ளரங்கில் நேற்று இடம்பெற்ற ஜே.வி.பியின் ஐந்தாவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டு மக்களின் சுதந்திரம், பொருளாதாரம் உள்ளிட்ட பல முக்கிய விடயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு வெளிநாட்டுச் சக்திகளுடன் கைகோர்த்துக்கொண்டு இந்த நாட்டை ஆட்சி செய்து வருகிறார். அன்று ஐ.தே.க. பின்பற்றிய அதே வழியைத்தான் ஜனாதிபதி மஹிந்தவும் இன்று பின்பற்றுகின்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## காயமுற்ற யாழ். தமிழர் கைதாகி விசாரணையில்!

கொழும்பு, மே 28

தெஹிவளை, ரயில் குண்டு வெடிப்பில் காயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் பொலிஸாரினால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொறட்டுவை, சொய்ஸாபுரப் பகுதியில் வசித்து வந்த 57 வயதுடைய - இந்த நபர் குண்டுவெடிப்புடன் தொடர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் முஸ்லிம் இளைஞர் சுடப்பட்டு சடலமாகக் கண்டுபிடிப்பு

வவுனியா, மே 28

வவுனியா, நெளுக்குளத்திலுள்ள நேரியக்குள வீதியில் நேற்றுக்காலை முஸ்லிம் இளைஞர் ஒருவரின் சடலம் சூட்டுக்காயங்களுடனும், கண்கள் மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் மீட்கப்பட்டது.

வவுனியா மதீனா நகரைச் சேர்ந்த மொகமட் அலி (வயது - 22) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைத்தொலைபேசி இணைப்பு வழங்கக் கடும் சட்டவிதிகள்

கொழும்பு, மே 28

கையடக்கத் தொலைபேசிக்கான புதிய இணைப்புகளை வழங்குவது தொடர்பில் புதிய - கடுமையான - சட்ட விதிகளை அரசு நடைமுறைக்குக் கொண்டுவரவுள்ளதாகப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கும்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முதலாவது அமர்வு நேற்று வவுனியாவில்

வவுனியா, மே 28

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முதலாவது அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.

இந்தப் பிரதேச சபையின் அதிகாரத்தை ஈ.பி.டி.பியினர், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் கைப்பற்றியிருந்தனர்.

எனினும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ஈ.பி.டிபியினர் செல்ல முடியாத நிலை காரணமாக இந்த அமர்வு இப்போது வவுனியாவில் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குத் தெரிவான ஒன்பது அங்கத்தவர்களும் நேற்றைய முதலாவது அமர்வுக்குச் சமுகமளித்தனர்.

2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குப் போட்டியிடுவதற்கென தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் ஈ.பி.டி.பி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் நியமனப் பத்திரங்களை தேர்தல் திணைக்களம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-02)

## ஆள்கடத்தல்கள் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பிள்ளையான் குழு உறுப்பினர் ஒருவர் கைது

மட்டக்களப்பு, மே 28

கடந்த 25ஆம் திகதி ஏறாவூர்- ஐயங்கேணி எல்லைப் பிரதேசத்தில் வைத்து இரண்டு முஸ்லிம் குடும்பஸ்தர்கள் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் வன்முறைகளைத் தூண்டிவிட்டு பதற்ற நிலையை ஏற்படுத்துவதற்கு காரணமாகச் செயற்படும் எவர் மீதும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று முஸ்லிம் பகுதிகளிலும் வன்முறைகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். தமிழ்-முஸ்லிம் மக்கள் வீண் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது எனவும், பொறுமையாகவும் நிதானமாகவும் நடந்துகொண்டு இப்பிரதேசத்தில் மீண்டும் சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் முதலமைச்சர் சந்திரகாந்தன் கேட்டுள்ளார். (சி)

## நகரப்பகுதியில் நேற்றுத் தேடுதல்

யாழ்ப்பாணம், மே 28

யாழ். நகரப் பகுதியில் முதலாம் குறுக்குத்தெருவிலிருந்து மார்ட்டின் வீதிவரையான பிரதேசம் நேற்றுக்காலை சுற்றிவளைப்புக்கு உட்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் தொடர்ந்து ஊரடங்கு

மட்டக்களப்பு, மே28

ஏறாவூர் பிரதேசத்தில் தற்போது வன்முறைகள் ஓய்ந்து அமைதி நிலவினாலும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் பிறப்பிக்கப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வன்முறைகள் ஓய்ந்து அமைதி நிலவினாலும்

(12ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரம்பொன் புனித வேளாங்கன்னி ஆலய வருடாந்தத் திருநாள்



பழம்பெருமை வாய்ந்த கரம்பொன் புனித வேளாங்கன்னி ஆலயத்தின் கொடியேற்றம் நாளை (29.05.2008) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு திருப்பலியுடன் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நற்கருணை விழா 30 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகும். இவ்வாலயத்தின் திருநாள் திருப்பலி இம்மாதம் 31ஆம் திகதி காலை 7.00 மணிக்கு திருச்செபமாலையைத் தொடர்ந்து ஒப்புக்கொடுக்கப்படும். அன்னை வேளாங்கன்னி பக்தர்கள் அனைவரையும் இத்திருநாளுக்கு அன்புடன் வரவேற்று அன்னையின் ஆசீர் பெற்றுச் செல்ல வாழ்த்துகின்றோம்.

கரம்பொன் பங்குத்தந்தையும்
பங்கு மக்களும்.

(சி-553006)

## வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

பருத்தித்துறை

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் : கல்லூரி மண்டபம்
காலம் : 15.06.2008 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 9.30 மணி

பெற்றோர் அனைவரையும் தவறாது சமூகம் தரும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு: பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் கணக்கறிக்கையினை பாடசாலை விளம்பரப் பலகையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

வ. கருணாமூர்த்தி,
செயலாளர்.

(சி-553007)

திருமதி.சீ.சண்முகநாதன்
தலைவர் (அதிபர்).

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை செல்வி ஜெயானந்தி இரத்தினசிங்கம் அவர்களின் சகோதரி

### திருமதி விஜயானந்தி ஜெகதீஸ்வரன்

23.05.2008 வெள்ளிக்கிழமை அன்று திடீர் மரணமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/செட்டிப்புலம் அ.த.க. பாடசாலை.

(74823)

## மரண அறிவித்தல்

### பிரம்மாகுமாரி செல்லமுத்து மருதப்பு



புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மருதப்பு செல்லமுத்து நேற்று (27.05.2008) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஐயாத்தைப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நல்லம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவரான மருதப்பு (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், C.G.R.) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நல்லதங்கம், கனகரெத்தினம், சின்னத்துரை (நீர்கொழும்பு-வர்த்தகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகாலட்சுமி (நீர்கொழும்பு), அம்பிகாவதி (கொழும்பு), மங்கையர்க்கரசி (கனடா), சறோஜாதேவி (லண்டன்), கமலாதேவி (தென்னாபிரிக்கா), விமலாதேவி ஆகியோரின் அன்பத் தாயும் காலஞ்சென்ற கதிர்காமநாதன், காலஞ்சென்ற நமசிவாயம், Dr. விமலேந்திரன் (கனடா), சுந்தரமூர்த்தி (லண்டன்), Dr. நவரத்தினராசா (தென்னாபிரிக்கா), கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் மோகன் (ஆஸ்திரேலியா), ராஜன் (நீர்கொழும்பு), Dr. சரவணபவன் (றாகம), கோமதி (கொழும்பு), ஜனார்த்தனன் (கனடா), Dr. சுதாகரன் (கனடா), சுதர்சன் (லண்டன்), சுரேந்திரன் (லண்டன்), சுசிதரன் (லண்டன்- Engineer), Dr. வானதி (கனடா), Dr. பிரசாந்தினி (கனடா), கஜாந்தி (இந்து மகளிர் கல்லூரி மாணவி), கோகுலப்பிரியா (யா/ வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருமதி சிவசுப்பிரமணியம் மகேஸ்வரி அவர்களின் சிறிய தாயுமாவார்.

அவரின் தகனக்கிரியைகள் யாவும் நேற்று (27.05.2008) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரமாகுமார் கணேசலிங்கம்,
தொழில்வழிச் சிகிச்சையாளர்,
யாழ். போதனா
வைத்தியசாலை.

73A, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (74827)

## அன்னை தங்கம்மாவுக்கு பூரண சுகம் வேண்டி இன்று பிரார்த்தனை

யாழ்ப்பாணம், மே 28

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு பூரண சுகம்பெற வேண்டி விசேட பிரார்த்தனை வழிபாடு இன்று காலை 7 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆரம்பமாக உள்ளது.

சகஸ்ரநாம பாராயண வழிபாடு, திருவாசகம் முற்றோதல், மிருத ஸ்ரீஹோமம் என்பன நடைபெறவுள்ளன.

சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் சுகநலம் வேண்டி பிரார்த்தனை வழிபாடு செய்ய வருகை தருமாறு அம்பாள் அடியார்களையும், சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவின் அபிமானிகளையும் துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையினர் கேட்டுள்ளனர்.

(அ-1)


### தேவை

(I) மில் வேலை
(II) மோட்டார் சைக்கிள் சுத்தகரிப்பு வேலை
என்பவற்றில் அனுபவம் உள்ளவர் தேவை.
தொடர்பு :- பிரிந்தா மில்ஸ்,
18, றக்கா றோட், யாழ்ப்பாணம்
தொலை. இல:- 222 9201.

**தவறிவிட்டது:** முருகையா புஸ்பராணி என்பவருடைய தே.அ.அட்டை (486540648V) யாழ்பாணத்துக்கும் மானிப்பாய்க்கும் இடையில் 24.05.2008 அன்று மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். லக்ஷன் வீடியோ, 256, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**தவறிவிட்டது:** செல்லத்துரைக் குருக்கள் பத்மினி என்பவருடைய தே. அ. அட்டை, விஷேட அடையாள அட்டை (ஆலங்குளாய், சண்டிலிப்பய் வடக்கு எனும் முகவரியுடையது) என்பன 23.05.2008 கந்தரோடைக்கும் நாச்சிமார் கோவிலடிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தொடர்பு: 18, துரைராஜா வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 222 5851.

## கண்ணீர் அஞ்சலி



### திரு. கணபதி ஆசாரியார்

இந்தியாவை பிறப்பிடமாகவும், இலங்கை P.T.R. நிறுவனத்தின் கொழும்பு, மன்னார் மற்றும் யாழ்ப்பாண ஸ்தாபனங்களில் மேற்பார்வையாளராக நீண்ட காலம் பணிபுரிந்த கணபதி ஆசாரியார் 25-05-2008 அன்று மதுரை திருப்பரங்குன்றத்தில் காலமானார். அன்னாரின் மறைவுக்கு P.T.R. நிறுவனத்தின் சார்பாக எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதுடன். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

தகவல்
P.தவராஜா (தயா)
P.T.R. நிறுவன உரிமையாளர்
மதுரை தொலைபேசி 0091-4522484683

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றி
ஓய்வுபெற்ற ஆசிரியை

### திருமதி அருளப்பு யோகம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(வீ/552999)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சீதாலட்சுமி பாலயோகன் B.Sc.,B.Ed.

(பழைய மாணவி - யா/வேம்படி மகளிர் கல்லூரி, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
முன்னாள் ஆசிரியை - யா/வேம்படி மகளிர் கல்லூரி.
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி (1972 -1984)



கொக்குவில் மேற்கு, நடராசா வீதி, மிதிலையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது லண்டனில் வசித்து வந்தவருமாகிய திருமதி சீதாலட்சுமி பாலயோகன் 25.05.2008 ஞாயிறன்று இரவு லண்டனில் காலமானார்.

அன்னார் வை.க.சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மகளும், கரவெட்டி சூ.பாலயோகன் (முன்னாள் ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி - தற்போது U.K) அவர்களின் அன்பு மனைவியும் கரவெட்டி சூரிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சோபிதா (Engineer - UK) , பரதன் (Post Graduate Student - U.K), ஆகியோரின் பாசமிகு தாயும், து. சசிக்குமாரின் (Engineer - UK) மாமியும் ஆதவன், ஆராதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சி.ஸ்ரீஸ்கந்தராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சி.சிவானந்தராசா (ஓய்வுபெற்ற படவரைஞர்), சி.சிவஞானராசா (இசை ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சி.பொன்னம்மாவின் பெறாமகளும் மற்றும் சூ.பாலச்சந்திரன் (Retired Accountant - S.L.P.A), காலஞ்சென்ற Dr.சூ.பாலசுந்தரம் (Batticaloa) மற்றும் சூ.பாலசோதி (Engi neer - U.K), சூ.பாலஇந்திரன் (Teacher, Royal College), சூ. பாலகிருஷ்ணன் (U.K), சூ.பாலசிங்கம் (Chartered Accountant - U.K), திருமதி K. கணேசன் (Retired Teacher - U.K), திருமதி T.மோகனதாஸ் (Germany), திருமதி T.தெய்வேந்திரன் (Swiss), திருமதி Y.கண்ணதாஸன் (U.K) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திரு.திருமதி துரைராஜசிங்கம் தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.06.2008 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
S.BALAJOGAN,
166, BROWING ROAD.
MANOR PARK, LONDON,
E 12 6PB, U.K.
T.P.00442085034377. (74820)

தகவல்:
புலவர் வை.க.சிற்றம்பலம் (தந்தை)
ஓய்வுபெற்ற ஆசிரியர்,
நடராசா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

### பொன்னுத்துரை குமாரகுலசிங்கம்

(இளைப்பாறிய உத்தியோகத்தர், இலங்கை விமானப்படை)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தட்டாதெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை குமாரகுலசிங்கம் 25.05.2008இல் கனடாவில் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதியரின் மகனும் தம்பையா - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் சரஸ்வதி (சறோஜா)வின் அன்புக் கணவரும் கீதா பரமேஸ்வரன் (கனடா- முன்னாள் ஆசிரியை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரன் (கனடா) அவர்களின் மாமனும் ரிசிகேசன், சிபிசரன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சிங்கம் வீதி,*
*உடுவில்.*
*தொடர்பு: 0019058744642.*

தகவல்:
பெறாமக்கள்.

### திருமதி சாந்தலிங்கம் அன்னலெட்சுமி

வேலணை கிழக்கு, 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தலிங்கம் அன்னலெட்சுமி 27.05.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சாந்தலிங்கத்தின் அன்பு மனைவியும் கேதாரநாதன், வசந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயும் சரசமலர், விஜயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம், சின்னராசா, சேனாதிராசா மற்றும் ராசலட்சமி (டென்மார்க்), சரஸ்வதி (வவுனியா), பாக்கியலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பொன்னம்மா, பராசக்தி (சுவிஸ்), மனோன்மணி, சின்னத்துரை, சிதம்பரநாதன், நாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிந்துஜன், நிசாந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2008) புதன்கிழமை பி.ப.1மணிக்கு புளியங்கூடல் தெற்கில் உள்ள அன்னாரின் மகன் கேதாரநாதனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சா.கேதாரநாதன்
(மகன்).

புளியங்கூடல் தெற்கு. (74822)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடங்கள்: விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 28

சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு துணை மருத்துவ சேவையுள் பாடசாலைப் பற்சிகிச்சையாளர் பயிற்சியின் பொருட்டு பெண் மாணவர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2003 தொடக்கம் 2006 வரையான ஆண்டுகளின் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் பெற்ற 'இசற்' புள்ளிகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2007.12.28 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி பூரணமான விண் ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தவறியவர்களும் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரி ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மொழி, கணிதம, விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 2003 -2006 காலப்பகுதியில் ஒரே அமர்வில் உயிரியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 16 திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர் (நிர்வாகம்) 2,சுகாதாரப்பராமரிப்புமற்றும்போஷணை அமைச்சு, 'சுவசிரிபாய', இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு- 10, என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 23.05.2008 திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

* * *

யாழ்ப்பாணம், மே 28

சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு துணை மருத்துவத் தொழிற் பயிற்சிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் விஞ்ஞான பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர் (நிர்வாகம்) 2, சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு, 'சுவசிறிபாய' இல. 385, வண.பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு-10' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 23.05.2008 ஆம் திகதிய அரச வர்த்த மானியில் பார்வையிடலாம். (202)

* * *

யாழ்ப்பாணம், மே 28

நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சில் தற்போது நிலவும் வரவேற்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மொழி, கணிதம், ஆங்கிலம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் மொழி மூலத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியில் விசேட திறமை பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை 'செயலாளர், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு, இல.464 பி, பன்னிப்பிட்டி வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு அடுத்த மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 23.05.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

# நாவற்குழிச் சந்தியை அண்டிய பகுதிகளில் சட்டவிரோதமாக மாடுகள் வெட்டப்படுகின்றன

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 28

நாவற்குழி சந்திப் பகுதியை அண்டிய பிரதேசங்களில் அண்மைக்காலமாக சட்டவிரோதமான முறையில் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாவற்குழி முந்நூறு வீட்டுத் திட்டம் மற்றும் நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டம் ஆகிய இடங்களிலேயே இவ்வாறான செயற்பாடுகள் அதிகம் இடம்பெறுவதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் இப்பகுதியில் தினமும் சண்டை சச்சரவு இடம்பெறுவதுடன் இப்பிரதேசத்தில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்காதுவிடின் இச் சட்டவிரோத செயல் மேலும் அதிகரிக்க வாய்ப்புக்கள் ஏற்படும் எனவும் பலராலும் கருத்துக் கூறப்படுகின்றது. (203-288)

## பாடசாலைகளின் புனரமைப்பிற்கு கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மே28

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் பொது நூலகக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கைதடி முத்துகுமாரசாமி ம.வி, அல்லாரை அ.த.க.பாடசாலை மந்துவில் ஸ்ரீ பாராதி வித்தியாலயம், மட்டுவில், சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றில் வகுப்பறைக் கட்டடங்கள் புனரமைக்கவும் மீசாலை விக்னேஸ்வராமகாவித்தியாலயத்தில் வகுப்பறை ஒன்றைக் கணனி அறையாக மாற்றுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## சிறுதொழில் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை

வடமராட்சி,மே28

கியூடெக்-கரித்தாஸ் தேசிய ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கிழ் சிறுகைத் தொழில் மேம்பாட்டிற்கான 6 நாள் வதிவிடப் பயிற்சி பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்றது.இப்பயிற்சிக்கான நிதி உதவிகளை சர்வதேச தொழில் அமைப்பு வழங்கியது. (203-236)

## சமுர்த்தி முகாமையாளர்களுக்கு தடை தாண்டல் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே 28

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கு முதலாவது தடைதாண்டல் பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் ஊடாக எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதிக்கு முன்னர் 'பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், அமைப்புகள் மற்றும் வெளிநாட்டுப் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறுகேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 23.05.2008 ஆம் திகதிய அரச வர்த்தக மானியில் பார்வையிடலாம். (202)

# மழுவை மயான வீதி ஓரங்களில் கழிவுகள் கொட்டப்படுவதால் சிரமம்

சுழிபுரம்,மே28

சுழிபுரம் மழுவைப் பகுதியில் மயானத்துக்குச் செல்லும் வீதியில் இரு பக்கமும் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் அந்த வீதியால் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுழிபுரம், சாந்தை, பனிப்புலம், சில்லாலை, பண்ணாகம் ஆகிய பகுதி மக்களின் ஒரேயொரு மயானமாக இது காணப்படுகிறது.

இந்நிலையில் இப் பகுதிகளில் கழிவுகள் கொட்டப்படுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து மக்களின் பாவனைக்குரிய இந்த வீதியில் இவ்வாறான கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (203-28)

# மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.பழைய பூங்கா பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்தரப் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த டெனிஷ் மிதிவெடி அகற்றும் குழுவினர் தமது பணிகளை நிறைவேற்றி இப்பகுதியை மிதிவெடி அற்ற பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

யாழ்.பழைய பூங்காப் பிரதேசம் டெனிஸ் மிதிவெடி அகற்றும் குழுவினரால் யாழ். அரச அதிபரிடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

85ஆயிரத்து 98 சதுர கிலோமீற்றர் பரப்பைக் கொண்ட இந்தப் பிரதேசத்தின் மிதிவெடி அகற்றும் பணிகள் கடந்த ஜனவரி 21 முதல் ஏப்ரல் 6 வரை நடைபெற்றன.

இக்காலப் பகுதியில் இந்தப் பிரதேசத்தில் இருந்து 59 வெடிக்காத பொருள்களையும் ஒரு மனித எதிர்ப்பு மிதிவெடியையும் மேற்படி அமைப்பினர் மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (02)

## மலசலகூடம் இன்றி மாணவர், ஆசிரியர் சிரமம்

யாழ்ப்பாணம்,மே28

மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் மலசலகூடம் இல்லாமையால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆரம்பப்பிரிவு வகுப்புக்களைக் கொண்ட இந்த வித்தியாலயத்தில் இருந்த மலசலகூடம் யுத்த அனர்த்த வேளையில் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும், அதன் பின்னர் புதிதாக அமைக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## மருந்துகளைப் பாதுகாக்க பிளாஸ்ரிக் போத்தல்கள்

கரவெட்டி,மே28

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மருந்து வழங்கும் பிரிவில் அவற்றைப் பாதுகாப்பதற்கான போத்தல்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

கடந்த காலங்களில் இவை ஏலத்தில் விடப்பட்டு திறைசேரிக்கு நிதியாக அனுப்பப்பட்டுவந்தது.

தற்போது நோயாளரின் நலன்கருதி அவை நோயாளருக்கு இலவசமாக வழங்கப்பட்டுவருகின்றன. (203-70)

# நிவாரணத்தை மட்டும் நம்பி வாழும் நிலையில் அல்லைப்பிட்டிக் கிராம மக்கள்

அல்லைப்பிட்டிக் கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களில் கணிசமானவர்கள் அண்மையில் மீள அந்தப் பகுதியில் குடியமர்ந்துள்ளனர். வருமானத்தை தேடிக் கொள்வதற்கான தொழில் வாய்ப்பு இல்லாத நிலையில் அவர்கள் நிவாரணத்தை மட்டுமே நம்பி இருக்கும் அவல நிலை காணப்படுகின்றது.

அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற இயலாதுள்ள இந்த மக்கள் வருமானத்தை ஓரளவாவது ஈட்டிக் கொள்வதற்கான சுயதொழில் வாய்ப்புகளை மேம்படுத்தும் முயற்சியில் 'கியூடெக் - கரித்தாஸ்' நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. அந்த நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் உதயனுக்கு இத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2006 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் யாழ்.அடைக்கல மாதா ஆலயம், நாவாந்துறை தேவாலயம் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் சிரமங்களின் மத்தியில் தங்கி இருந்தனர். இடம் பெயராது அந்தக் கிராமத்தில் 20 குடும்பங்கள் தங்கியிருந்தன. அவர்களுடன் தற்பொழுது 65 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

நாவாந்துறை ஆலயப்பகுதியிலும் உறவினருடனும் வசித்து வரும் குடும்பங்களில் இருந்து மேலும் 65 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் விரைவில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர். இவர்கள் தங்களது வீடுகளை சென்று பார்த்து வருவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

### நிவாரணத்தை மட்டும் நம்பி இருக்கும் மக்கள்

தற்பொழுதுள்ள 85 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுள் 65 குடும்பத்தவர்கள் கடற்தொழிலாளர் ஆவர். இவர்களுக்குத் தொழில் செய்ய இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. இதனால் இவர்கள் வரும் நிவாரணத்தை மட்டுமே நம்பி இருக்கிறார்கள். அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்வதற்கான வருமானம் இல்லாமலேயே வாழ்க்கையை நடத்துகின்றனர்.

இவர்களின் மேம்பாட்டுக்கு கோழி வளர்ப்பிற்கான கடன் வசதியை கியூடெக் நிறுவனம் செய்து கொடுத்துள்ளது.

20 விண்ணப்பதாரிகளுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 80 பயனாளிகள் விண்ணப்பித்திருந்தனர். ஏனையவர்களுக்கு அடுத்த வாரம் அளவில் கடன் வசதி செய்து கொடுக்கப்படும்.

### மாற்றுத் தொழில் ஏற்பாடு அவசியம்

கடற்றொழிலாளருக்கு தலா முப்பதாயிரம் ரூபா பெறுமதியான 21 வள்ளங்களை நிறுவனம் வழங்கியுள்ளது. வலைகளும் வழங்கப்பட்டுள்ளன. தொழில் செய்வதற்கான அனுமதி கிடைக்கும் வரை மாற்று ஏற்பாடுகள் அவசியமானதாகும். தோட்டச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கான உதவிகள் மேற்கொள்வதற்காக கிராம சேவையாளர் ஊடாக தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன. அந்தப் பகுதி மீன்பிடி சங்கத்தின் ஊடாக தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு வள்ளங்கள், வலைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

### சொறி, சிரங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்

தோல் வியாதிகளால் இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறார்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். பொதுச் சுகாதார பரிசோதகரின் உதவி பெறப்பட்டுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவை சங்கம் நடமாடும் வைத்திய சேவையை கிழமைக் கொருமுறை நடத்தி வருகிறது. வைத்திய சேவை போதுமானதல்ல (புதன் மட்டும்) வைத்திய நிலையத்துக்கான நிரந்தரக் கட்டடம் இல்லாததால்; பாடசாலை மற்றும் மரங்களின் நிழல் பகுதிகளில் வசதியைப் பொறுத்து வைத்திய உதவி வழங்கப்படுகிறது.

### குடிதண்ணீர் மற்றும் வசிப்பிடம்

தற்காலிக கொட்டகைகள் சேதமடைந்துள்ளதால் 'வேள்ட்விசன்' நிறுவனம் திருத்தம் செய்து கொடுத்துள்ளது. நீர் வசதி உண்டு. கிணறுகளை இறைத்து சுத்தப்படுத்தும் வேலையை 'சோஆ' நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

தபால் சேவை இதுவரை ஒழுங்குக்கு வரவில்லை. போக்குவரத்து சேவையும் இல்லை. அல்லைப்பிட்டிச் சந்திக்கு வந்தே வாகனங்களில் பயணிக்க முடியும்.

யுவானியார் தேவாலயம் மற்றும் பிலிப்பு நேரியார் ஆலயங்கள் சேதமடைந்துள்ளன. ஞாயிற்றுக்கிழமைகளில் 'சாட்டி' பங்குத் தந்தை அங்குள்ள கத்தோலிக்க மக்களின் வழிபாட்டில் திருப்பலி ஒப்புக் கொடுத்து வருகிறார்.

### பாடசாலை மாணவர்கள்

87 மாணவர்கள் பராசக்தி வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர். பாடசாலைத் தளபாடங்கள் இடம்பெயர்வு காலத்தில் காணாமல் போய்விட்டதனால் 75 சோடி (கதிரை, மேசை) தளபாடங்களைச் செய்து கொடுப்பதற்காக எமது நிறுவனம் கேள்வி கோரியுள்ளது.

பாடசாலையில் உள்ள மாணவ மாணவியர் அனைவருக்கும் நிறுவனம் 87 ஆயிரம் ரூபா பெறுமதியான 87 சோடி சப்பாத்துக்களை கடந்த வெள்ளிக்கிழமை (21.50.2008) அன்பளிப்பாக வழங்கியுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-302)

## சுயதொழிலுக்குக் கரித்தாஸ் உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேசியாவில் உட[illegible] வேலைவாய்ப்பு

பிரபல Electronic உற்பத்தி தொழி[illegible]லையில் (Sony, Panasonic, Kenwood) பொறியியல் உதவியாளர்கள் உடனடித் தேவை.

**தகைமைகள்:**

வயது 18- 35
GCE O/L
ஆங்கிலம் - பேச்சுத்தகைமை

Diploma in Electronic பட்டதாரிகளுக்கு விசேட சம்பளம் வழங்கப்படும்.
Diploma பட்டதாரிகளுக்கான வெற்றிடம் 150

**உதவியாளர்களுக்கான வெற்றிடம்**

ஆண்கள்- 100
பெண்கள்- 100

சம்பளம்- ஆண்கள் -RM 800 -RM 1000 (Rs 25400- 33000)
பெண்கள் -RM 700 -RM 800 (Rs 23100- 25400)

**தங்குமிடம், மருத்துவம், பிரயாணச்சீட்டு இலவசம்.**

கடவுச் சீட்டு, கடவுச்சீட்டு பிரதி- 3, 10 நிழற்படங்கள் ( Passport Size-Photo) சுயவிவரத்துடன் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**EXPRESS ASIA**
49, A. அம்பலவாணர் வீதி, அந்திரடி (பிள்ளையார் கோயிலுக்கு அருகில்), யாழ்ப்பாணம்
T.P.: 2228846
(74811)


# கேள்வி அறிவித்தல்

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் (ESDP)- 2008 நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய வலயக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.

1. அ. ஒப்பந்தக்காரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும், பதிவுப் புத்தகம் 2008ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
   ஆ. 1தொடக்கம் 4 வரை பாடசாலைக்குரிய வேலைகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்துமுடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப் பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி 'அ'இல் குறிப்பிட்ட சட்ட திட்டமும் மீளளிக்கக்கூடிய, மீளளிக்க முடியாத வைப்புப் பணமும் விதி விலக்களிக்கப்பட்டுள்ளது.
2. கேள்விப் பத்திரங்களின் பெறுமதி சேர்வரி (vat) 15% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி (vat) 15% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
3. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 28.05.2008ஆம் திகதியிலிருந்து 11.06.2008 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை தென்மராட்சிக் கல்விஅலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | பாடசாலையின் பெயரும், வேலை விவரமும் | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் | மீளளிக்க கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01. | வகுப்பறையின் கட்டடத் திருத்தம்- 60'x 16' யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி | 250.00 | 1,250/= | M 9 |
| 02. | வகுப்பறையின் கட்டடத் திருத்தம்- 50'x 20' யா/ அல்லாரை அ.த.க.பா. | 250.00 | 850/= | M 9 |
| 03. | வகுப்பறையின் கட்டடத் திருத்தம்- 75'x 20' யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் | 250.00 | 850/= | M 9 |
| 04. | வகுப்பறையின் கட்டடத் திருத்தம்- 50'x 25' யா/மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம் | 250.00 | 900/= | M 9 |
| 05. | வகுப்பறையை கணனி அறையாக மாற்றுதல் - 20'x 25' யா/ மீசாலை விக்கினேஸ்வரா வித்தி. | 500.00 | 2650/= | M 9 |
| 06. | நூலகக் கட்ட நிர்மாணம் - 60'x 25' யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. | 750.00 | 33000/= | M 7 |

4. விண்ணப்பங்கள் யாவும் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2008ஆம் ஆண்டு யூன் மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப.11.30 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
5. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் கிளைகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

**திரு.கு.பிறேமகாந்தன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

(சி/553004)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலேஸ்வரி கிருஸ்ணசாமி

**(கண்மணி ரீச்சர்)**
**( ஓய்வுபெற்ற ஆசிரியை, மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்)**

வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி கிருஸ்ணசாமி நேற்று (27.05.2008) செவ்வாய்க்கிழமை காலை இறைபதமடைந்தார்.

அன்னார் மா.கிருஸ்ணசாமி (கற்கண்டு) அவர்களின் அன்பு மனைவியும் கி.செந்தூரன், கி.கிருபாலினி (அபுதாபி) ஆகியோ ரின் பாசமிகு தாயும் கி.கிருபானந்தன் (அபுதாபி), செ.நிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற செ.ராஜலிங்கம், காலஞ்சென்ற இ.பறுபதம், செ.துரைச்சாமி, செ.சிவப்பிரகாசம், செ.முத்துரட்ணம் (ஈசா) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2008) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஜெயரட்ண மலர்ச்சாலையில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செந்திலகம்,
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.
(சி/553005)

தகவல்:
**மா.கிருஸ்ணசாமி** (கணவர்) **077 4036844**
**கி.கிருபானந்தன்** (மருமகன்) **077 7497285**
**16, 6/4,1St சப்பல் லேன், வெள்ளவத்தை.**

## பொன்னுச்சாமி சண்முகரத்தினராசா

[இளைப்பாறிய கணக்காளர், கடதாசிக் கூட்டுத் தாபனம், கொழும்பு]



பொன்னுச்சாமி சண்முகரத்தினராசா கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி மற்றும் மாணிக்கம் தம்பதியரின் மகனும் பரமேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை, மகாஜனக் கல்லூரி) அன்புக் கணவரும் மாதுமையாள் (பொறியியல் உதவியாளர், கனடா), பொன்சபேசன் (தொழில் நுட்ப உதவியாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சு.மகேஸ்வரனின் (கணனிப் பொறியியலாளர்) மாமனும் பொ.புவனசுந்தரேஸ்வரி, சி.ஞான சுந்தரரேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் சகோதரரும் சிவசேகரம் (இ.போ.ச ஓய்வு பெற்ற பயிற்சி உதவியாளர்), செல்வரத்தினம், (புத்தளம்),சிவபூரணம் ஆகியோரின் மைத்துனரும் சி.கார்த்தியாயினி (தொழில் நுட்ப உதவியாளர், ரெலிகொம்), சி.யோகவாணி (பொறியியலாளர், சர்வோதயம்) ஆகியோரின் மாமனும் ம.டிலன், ம.கவின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் பொரளை ஜெயரட்ண மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (28.05.2008) புதன்கிழமை 2 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி
011 2713963
078 5574490

ச.பொன்சபேசன் (மகன்),
120/1, காலிவீதி,
தெகிவளை.
(சி/55303)

## தொண்டர் ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், மே28

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்க விசேட கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று சங்கச் செயலாளர் தெரிவித் துள்ளார்.(203)

## கூட்டம்

யாழ்ப்பாணம், மே28

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையினரால் செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகள் தொடர்பானபரப்புரைக் கூட்டம் இன்று புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படவுள்ளது. (203)

# தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தில் பிளவு!

கொழும்பு, மே 28

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்திலிருந்து ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவின் ஆதரவாளர்கள் நால்வர் இடைநிறுத்தப் பட்டுள்ளமையைத் தொடர்ந்து அந்த அமைப்பு பிளவுபடும் சாத்தியக் கூறுகள் உருவாகியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாதாந்த நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தைக் குழப்ப மு[illegible]ன்றனர் எனக் குற்றம் சாட்டி ஜே.வி.பி. தலைவரின் ஆதரவாளர்கள் நால்வர் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

வண. தம்பிர அமில தேரர், வின்னி ஹெட்டிகொட உட்படப் பலர் கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தினர் எனவும், இதன் காரணமாக அவர்களை வெளியேற்றுவதற்காகப் பொலிஸார் அழைக்கப்பட்டனர் எனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்திற்கு அவமானத்தை ஏற்படுத்தியமைக்காகவும் அதன் அனுமதியின்றி செய்தியாளர் மாநாட்டை நடத்தியமைக்காகவும் இந்த நால்வரையும் இடைநிறுத்தும் முடிவு எடுக்கப்பட்டது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஜூன் 16ஆம் திகதி தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தேசிய மாநாட்டைத் தாம் நடத்துவார் எனத் தெரிவித்துள்ள வண. அமில தேரர், அமைப்பின் தற்போதைய நிலை குறித்துத் தெளிவுபடுத்தவும் விமல் வீரவன்ஸ குழுவினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுமே மாநாடு கூட்டப்படுவதாகவும் தெரிவித் துள்ளார். (சி)


## நாய் விற்பனைக்கு

40 நாள் நிரம்பிய நல்ல இன ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
(74813) T.P.: 021 222 9253


## தவறிவிட்டது

குப்பிழான் வடக்கைச் சேர்ந்த நடராசா குணரத்தினம் (அதிபர்) ஆகிய எனது தேசிய அ. அட்டையும் (593470750V) 00123 என்ற இலக்கமுடைய உத்தியோகத்தர் அ. அட்டையும் 26.05.2008 திங்கட்கிழமை மாலை குப்பிழான் சந்திக்கும் சுன்னாகம் சந்திக்கும் [illegible] கள் புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தில் [illegible] வழங்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் வேணுகோபால் ஆச்சாரி இராமன் ஆச்சாரி



வண்ணை, சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சண்டேஸ்வரர் உற்சவ உபயகாரரும் சண்டேஸ்வரர்,நால்வர் ஐம்பொன் விக்கிரகங்களை வடிவமைப்பு செய்து தந்தவருமாகிய

**அமரர் வே.இராமன் ஆச்சாரி**

அவர்களின் திடீர் மறைவை ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒரு சிறந்த சிற்பியின் இழப்பால் அல்லலுறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டுகின்றோம்

366, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம். (74815)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயர் கோயில்
தர்மபரிபாலன சபையினரும்
சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போர்க்களங்களில் நின்றும் தத்துவக் கருத்துக்களை எழுதிவைத்தவர் மன்னர் மார்கஸ் ஆர்லியஸ்



மார்கஸ் ஆர்லியஸ் அன்டோனியஸ் பத்தொன்பது ஆண்டு காலம் ரோம் சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகக் கோலோச்சியவர். (161-180) ரோம் பேரரசராக அவர் விளங்கிய போதிலும் ''மெடிடேஷனஸ்'' என்ற அவரது தத்துவ நூலில் அவர் தந்த கருத்துக்களுக்காகவே பெரிதும் போற்றப்படுகிறார்.

அவர் உன்னதமான மனிதாபிமானம் மிக்க பெருந்தன்மையாளர். தன்னலம் மறுத்தவர். போர்க்களங்களில் முகாமிட்டுக் கொண்டிருக்கும்போது கூட சற்றுநேரம் கிடைத்தாலும் தன் சிந்தனைகளைக் குறிப்புகளாக எழுதி வைக்க மார்கஸ் ஆர்லியஸ் தவறியதில்லை. மனதுக்கு வலிமையேற்றும் சிந்தனைகள் அவை. அவற்றில் சில மணித்துளிகள் இவை:-

* பாதங்களைப் போல, கரங்களைப்போல, கண் இமைகளைப் போல, பற்களின் மேல் கீழ் வரிசைகள் போல ஒருவருக்கொருவர் உதவி செய்யவே நாம் இயற்கையில் படைக்கப்பட்டிருக்கிறோம்.

* உடலின் வாழ்க்கை நதி போன்றது; ஆன்மாவின் வாழ்க்கைப் பனி மூடிய கனவு போன்றது.

* உண்பது, அருந்துவது, உறங்குவது, பாலுணர்வு போன்று வாழ்க்கையின் சகஜமான ஒரு நிகழ்வு தான், மரணம் என்பதை உணர்ந்து மரண பயத்தை வெற்றி கொள்ளுங்கள். மரணம் இயற்கையானது. இயற்கையான எதுவும் தீங்கு பயப்பதாகாது.



மார்கஸ் இறந்தபோது ஒலிம்பஸ் மலையில் குடியிருக்கும் கடவுள்கள் சேர்ந்து அவரைக் கௌரவிக்கும் வகையில் விருந்தொன்று ஏற்பாடு செய்தார்கள் என்று ஒரு கதை உண்டு. அந்த விருந்தில் ஒரு போட்டி அறிவிக்கப்பட்டது. எல்லா ரோமாபுரி மன்னர்களும் விருந்துக்கு வந்திருந்தார்கள். அவர்களில் மிகச் சிறந்த மன்னர் யார் என்பதைத் தெரிவு செய்வதே போட்டி.

பரிசை வெல்வதற்காக ஒவ்வொரு மன்னரும் தனது வீர, தீர பராக்கிரமச் செயல்களையும் தான் வென்ற நாடுகளின் பட்டியலையும் பெருமையுடன் தெரிவித்தார்கள்.

''ஏதோ ஒரு சாதாரண தத்துவஞானியாகப் பிறர் மனம் நோகாதபடி இருக்க நான் முயற்சிகளை மேற்கொண்டேன். அவ்வளவுதான்!'' என்று சொல்லி அமர்ந்தார் மார்கஸ் ஆர்லியஸ்.

பரிசு அவருக்கே கிடைத்தது.

ஒரு குதிரையின் மீது சவாரி செய்வது போன்ற மார்கஸின் சிலை இன்றும் தலைநகர் ரோமில் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. ************


ரவி, சதுமலை.

## புதன் பொய்கை

# முதல் புத்தகம் எப்படி இருந்தது?

நாம் இன்று புத்தகமாகப் பார்க்கும் அமைப்பு உருவாவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகள் பிடித்ததாகக் கருதப்படுகிறது. எனவே முதல் புத்தகம் எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பார்க்கவும் முடியாது.

உண்மையில் நவகாலத்தில் புத்தகம் என்று குறிக்கப்படும் கருத்தில் ஆரம்பகால புத்தகங்களை எண்ணிப்பார்த்தால் அவை புத்தகங்களே அல்ல.






ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் அதுவும் தென்னிந்தியாவில் ஓலைச்சுவடிகளிலேயே ஆரம்ப காலத்தில் நூல்கள் எழுதப்பெற்றுள்ளன. ஐரோப்பியர் வருகையின் பின் நூல்கள் கடதாசியில் எழுதப்படலாயின.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பபிலோனியர்களும் அஸிரியர்களும் களிமண்ணில் பலகை போன்று செய்த தட்டுகளில் எழுதினார்கள். பாதுகாத்து வைக்க வேண்டிய குறிப்புகளை இந்தத் தட்டுகளில் அவர்கள் எழுதிவைத்துக் கொண்டார்கள்.

இந்தக் களிமண் தகடுகள் காயுமுன்னரே அவர்கள் கூர்மையான சிறு ஆயுதங்களால் அழுத்திக் கீறி எழுதி வைத்துக் கொண்டார்கள். இந்த எழுத்துக்கள் ஆப்பு வடிவில், அல்லது படங்களால் ஆனவை. களிமண் தகடுகள் நீண்டகாலம் நீடித்திருக்க வேண்டும் என்பதற்காக சூடுகாட்டி வைத்துக் கொள்ளப் பட்டன. பதிவு செய்யப்பட்ட விடயம் நீளமாய் இருந்த வேளைகளில் பல களிமண் தகடுகளில் எழுதி கோவையாக வைத்துக் கொள்ளப்பட்டன. அவ்வாறு எழுதப்பட்ட பல தகடுகள் அல்லது பக்கங்கள் புத்தகமாகக் கருதப்பட்டிருக்கலாம்.



ஆதி கால எகிப்தியர்கள் இக்கால புத்தகம் போன்ற ஒரு அமைப்புக்கு ஒத்த ஒருவகை புத்தகங்களைத் தயாரித்துள்ளனர். பெப்பிரஸ் (Papyrus) என்றழைக்கப்படும் ஒருவகை நாணற் புற்களைக் கொண்டு கரடுமுரடான புத்தகங்களை அவர்கள் செய்தார்கள். தட்டையான தாள்கள் கைகளால் செய்யப்பட்டன. வெளிறிய மஞ்சள் நிறமான இந்தத் தாள்கள் ஒன்றாக ஒட்டப்பட்டு நீளமான தகடுகள் போல் அமைக்கப்பட்டன. அவை பின்னர் உருளைகளில் சுற்றி வைத்துக்கொள்ளப்பட்டன. ஒட்டடை கரியால் தயாரிக்கப்பட்ட மையினால் எகிப்தியர்கள் அவைகளில் கவிதைகள், கதைகள் போன்றவற்றைப் பட எழுத்தக்களினால் எழுதினார்கள் இந்த சுருள்களை சில சமயம் கையாள்வதில் சிரமமாய் இருந்தமையால், எழுத்துக்கள் தனித்தனி தாள்களில் எழுதப்பட்டு பின்னர் ஒன்றாக தொகுத்து புத்தகமாக்கப்பட்டன. கிரேக்கர், ரோமர்களும் புத்தகங்களை அமைத்துள்ளனர். அவை உருளைகளில் சுற்றிவைக்கப்பட்டன.*********** (ரங்கன்)

# 40 கோடி சகோதரர்களைக் கொண்ட காந்திஜி



மகாத்மா காந்தி சட்டை அணிந்து கொள்ளாமல் இருந்ததைக் கவனித்து வந்த ஒருசிறுவன் அவரிடம் வந்து அன்போடு ''தாத்தா உங்களுக்கு ஏன் சட்டை இல்லை? என் அம்மாவிடம் சொல்லி உங்களுக்கு ஒரு சட்டை தைத்துத்தரவா?'' என்று கேட்டான்.

அதற்கு மகாத்மா காந்தி கனிந்த குரலில் பதிலளித்தார். ''அப்படியே செய். ஆனால் என் சகோதரர்களுக்கும் நீ சட்டை தைத்துக் கொடுக்க வேண்டியிருக்குமே.'' என்றார்.

''அவர்கள் எத்தனை பேர் தாத்தா?'' எனச் சிறுவன் கேள்வி எழுப்பினான்.

''நாற்பது கோடி பேர் '' எனக் காந்திஜி சிரித்துக் கொண்டே பதிலளித்தார். ************ - சூரியன்.

## வேரில்லா மரம்

சமயப் பற்றற்ற ஒழுக்கம் வேரில்லா மரம்;
ஊற்றுக் கசிவில்லாத ஓர் ஓடை;
அது மணல் மீதமைந்த மனை;
மழையில்லாத போது அது வாழ்வதற்கெளிதாம்;
ஆனால் புயல் வந்தால் தாங்காதே!

-பெர்னாட் ஷோ-

# முத்துக்கள்

சோலையிலே மாலையிலே
துளிர்களிலே தளிர்களிலே
கோலமலர் இதழ்களிலே
குலவ பனித் துளிர்களெல்லாம்
மாலை என்னும் தொழிலாளி
வடித்து விட்ட வியர்வை நீர்
காலையெனும் முதலாளி
கணக்கெடுக்கும் முத்துக்கள்.

- கவிஞர் அப்துல் ரகுமான்

# அவன் செய்த இரு நன்மைகள்

ஓர் ஆசிரியர் ஒரு மாணவனின் கையில் பிரம்பைக் கொடுத்தார். எப்படி? அன்று அந்த வகுப்புக்கு வர வேண்டிய ஆசிரியர் வரவில்லை. அதனால் வேறொருவர் வந்தார்.

அந்த வகுப்புத் தலைமை மாணவனை அழைத்து அவனிடம் பிரம்பைக் கொடுத்து ''நான் தூங்கப் போகிறேன். இன்னும் ஒரு மணி நேரத்துக்குச் சத்தம் வராமல் பார்த்துக்கொள்'' என்றார்.

பிறகு சட்டையைக் கழற்றி விட்டுக் கடைசி வாங்கில் படுத்துத் தூங்கிவிட்டார்.

அந்நேரம் திடீரென கல்வி ஆய்வாளர் வந்தார். ஜீப் சத்தம் கேட்டதும் ஆசிரியர் ஓடி வந்து மாணவர்களின் முன் நின்று விட்டார்.

சட்டையின்றி இருப்பதை உணர்ந்து தன் மார்பைக் காட்டி, ''மாணவர்களே! இது விலா எலும்பு, இது நெஞ்சு எலும்பு, இது ...'' என்று பாடம் எடுக்க ஆரம்பித்தார்.

'ஆஹா! ஆசிரியர்கள் பெரும்பாலும் படத்தை வைத்துக் கொண்டு தான் பாடம் எடுப்பார்கள். இவர் தன் உடம்பைக் காட்டியே பாடம் எடுக்கிறாரே. மிகவும் நல்ல ஆசிரியர். இவருக்கு ஏதாவது விருது கொடுக்க வேண்டும்' என்று நினைத்தபடி ஆய்வாளர் தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்றார்.

தான் கண்டதை அவரரிடம் சொன்னார். தலைமை ஆசிரியர், அப்படி ஒருவர் நம் பள்ளியிலா என்று நினைத்தபடி, ஆய்வாளருடன் வகுப்புக்கு வந்தார்.

அதற்குள், ஆய்வாளர் போய்விட்டார் என்று ஆசிரியர் மறுபடியும் தூங்கிவிட்டார். அப்போது தலைமை ஆசிரியர் அவரை எழுப்ப ஆரம்பித்தார்.

உடனே ஆய்வாளர், ''சார், தொந்தரவு செய்யாதீர்கள். இப்போ அவர் தூங்குவது எப்படி என்பது பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்'' என்றார்!

ஓர் ஆசிரியர் மாணவர்களிடம், ''தினமும் ஒரு நல்ல காரியமாவது செய்ய வேண்டும்'' என்றார். அடுத்த நாள் ஒரு மாணவன், ''சார், நான் இன்று இரண்டு நல்ல காரியங்கள் செய்தேன்'' என்றான்.

''வெரிகுட். அப்படியென்ன நல்லது செய்தாய்?'' என்று வியப்புடன் கேட்டார் ஆசிரியர்.

''நான் பள்ளியிலிருந்து போகும் போது நடுத்தெருவில் ஒரு பாறாங்கல் கிடந்தது. அதை எடுத்து ஓரமாகப் போட்டேன்''.

''நல்லது செய்தாய்'' என்று பாராட்டிய ஆசிரியர். ''அப்புறம் என்ன செய்தாய்?'' என்று விசாரித்தார்.

''ஒரு வயதானவர் காலில் அடிபட்டு வலியால் துடித்தார். அவரை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றேன்'' என்றான் மாணவன். 'ஆஹா' என்று தட்டிக் கொடுத்த ஆசிரியர், ''ஆமாம், பெரியவருக்கு எப்படி அடிபட்டது?'' என்று கேட்டார்.

''நான் தூக்கிப் போட்ட கல்தான் அவர் காலில் [illegible]'' என்றான் மாணவன்!! ********************* ([illegible])

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் என்பது பழமொழி. அதாவது நமது உடல் ஆரோக்கியமாக இருந்தால் நாம் எந்தப் பணியையும் செய்ய முடியும்.

தூக்கம் என்பது உடலுக்கு மிக இன்றியமையாதது. உடலுக்கும், மனதிற்கும் முழுமையான ஓய்வை அளிக்கும் உன்னதமான ஒரு விஷயம் தான் தூக்கம்.

தினமும் 3 வேளை உண்ணும் உணவும், குறைந்த பட்சம் 6 மணி நேர தூக்கமும் மனிதனுக்குத் தேவைப்படுகிறது.

இரவில் அதிகமாகத் தூங்குபவர்களைவிட குறைந்த நேரம் தூங்குபவர்களுக்குத் தான் உடல் பருமன் பிரச்சினை ஏற்படுவதாக சமீபத்தில் கனடா நாட்டுப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் நடத்திய ஆய்வு கூறுகிறது.

# உடல் உறுப்புக்களின் நேரப்பட்டியலுக்கேற்ப நமது செயற்பாடுகள் அவசியம்

குறைவாகச் சாப்பிடுவதும் அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதும், நேரம் தவறி சாப்பிடுவதும் உடலுக்கு கேட்டை உண்டாக்கும். ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உணவுகளை உண்ணும் பழக்கத்தை கொண்டு வர வேண்டும். ஏனோ தானோ என்று உண்ணாமல் உடலுக்கேற்ற உணவுகளை மட்டும் அளவோடு உண்பது நல்லது.

சரி ஏன் நேரத்திற்குத் தூங்கவேண்டும். அது என்ன ஆறு மணி நேரம் தூக்கம். ஏன் அதிகாலையில் எழும்பவேண்டும். நேரம் தவறாமல் ஏன் சாப்பிடவேண்டும்? என்றெல்லாம் விதண்டாவாதமாகக் கேள்வி எழுப்புவர்களுக்கு கீழ்க்கண்ட விளக்கத்தை தந்துதான் ஆகவேண்டும்.

நமது உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புகளும் ஒரு சில மணி நேரத்தில் தான் தங்களது பணிகளைச் செய்கின்றன. அந்த நேரத்தில் அதற்கேற்ற வகையில் நமது உடல் ஓய்வாக இருக்க வேண்டியது அவசியம்.

**இரவு 9 மணி முதல் 11 மணி வரை :-**

இந்த நேரம் நமது உடலில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்திகள் வேலை செய்யும் நேரம். அதாவது நமது உடலில் உள்ள தேவையற்ற, அதிகப்படியான இரசாயனங்களை வெளியேற்றும் பணியைச் செய்யும். எனவே இந்த சமயத்தில் நாம் படுக்கைக்குப் படுக்கச் சென்றுவிட வேண்டும். இல்லையெனில் அமைதியாக அமர்ந்து பாடல் கேட்பதும் நல்லது.

இந்த நேரத்தில் ஓய்வெடுக்காமல் வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து விடுகிறது. *************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரைச் சந்திக்க, கோரிக்கை கடிதங்களுடன் வர அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே27


சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்க வரும் பொதுமக்களை அவர்களின் கோரிக்கை மற்றும் விண்ணப்பக் கடிதங்களுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

தங்களது கோரிக்கைகள் தொடர்பில் கோரிக்கைக் கடிதங்களை கொண்டுவரும்படியும் தொழில் வாய்ப்புக் கோரி வருபவர்கள் தங்களது கோரிக்கைக் கடிதங்களுடன் சுயவிவரக் கோவையையும் ஏற்கனவே ஏதாவது பதவிகளுக்கு விண்ணப்பம் செய்திருப்பின் அவ் விண்ணப்பப் படிவங்களின் பிரதிகளையும் இணைத்துக் கொண்டுவரும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தினமும் பெருந்திரளான பொதுமக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகளைப் பூர்த்திசெய்து கொடுக்க வேண்டியிருப்பதால் பொதுமக்களின் வசதிகருதியும் வீண் தாமதங்களைத் தவிர்க்கும் முகமாகவும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவைச் சந்திக்க வரும்போது மேற்படி கோரிக்கை மற்றும் விண்ணப்பக் கடிதங்களைக் கொண்டு வருமாறு அமைச்சரின் ஊடக இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(அ)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு:24.11.1945

இறப்பு: 22.04.2008

### அமரர் சுப்பிரமணியம் சோதிலிங்கம் (சோதி)

நயினாதீவு அன்னபூரணி விலாஸ் உரிமையாளரும்,
கொழும்பு பிரபல வர்த்தகரும், நயினாதீவு அமுதசுரபி
அன்னதான சபை உறுப்பினரும்
*(28.05.2008 புதன்கிழமை)*

அலை சூழ்ந்த நயினையிலே
பலபேர் உமை போற்ற
வாழ்ந்த எங்கள் சோதியே சோதிலிங்கமே...
நின் பிரிவு தாங்காமல் உமை இழந்து வாடுகிறோம்
எம்மைவிட்டு எங்கு சென்றீர, எங்கள் ஒளிவிளக்கே...
அலைகடலைத் தாண்டிவந்து
ஆலயத்தில் தூங்கிவிட்டாய்...
அனுதினமும் வருந்துகிறோம்
உமை இழந்து உம் உறவு.

*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"கலா பவனம்", 8 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரன்.

## உணவுப்பொதியை பொறுப்பேற்கக் கோரிக்கை

வலி.வடக்கு, மே28

காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த பயணிகள் கப்பலில் தவறவிடப்பட்ட கறுப்புப்பை ஒன்று மல்லாகம் நீதிமன்றத்தில் உள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

அந்தப் பையில் உணவுப் பொருள்கள் உள்ளதால் உடன் அதனை உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் கோரியுள்ளார். (1-68)


### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
*நல்லூர் பாம்சென்ரர்*
19, முருகேசன் வீதி, நல்லூர்.

### வீடு, காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு அருகில் தெற்கு வீதியில் அமைந்துள்ள (4 அறை, 2 ஹோல், குசினி) சகலவசதிகளுடன் 2 பரப்பில் அமைந்துள்ள வீடும், சற்று அண்மையில் 100 பனைகளுடன் கூடிய 5 பரப்புக் காணியும், Sri lanka பள்ளிக் கூடத்திற்கு அருகில் 4 ½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய
தொ.பே.இல.:
0112552487, 0777492771. (அ/552949)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தாயின் மடியில்:*
*21.11.1937*

*ஆண்டவன் அடியில்:*
*08.06.2007*



### திருமதி சிவபாக்கியம் செல்லப்பா

*திதி: அட்டமி*
*28.05.2008*

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
எம் அன்புத் தெய்வத்தின் நினைவு
எம்மை விட்டகலாது

*உங்கள் பிரிவால் வாடும்:*
*குடும்பத்தினர்.*

டச்சுறோட், அளவெட்டி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்

*தோற்றம்: 26.02.1944*



*மறைவு: 28.04.2008*

### திருமதி கிருஸ்ணமூர்த்தி சரசு

*குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எம்மை வாழவைத்த எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.05.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் அவரது நினைவஞ்சலியிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குகொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், உத்தியோகத்தர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் சாத்தி அஞ்சலி செய்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்டோருக்கும் மற்றும் இழப்பின் துயரத்தால் நிலைதடுமாறி நின்றவேளை முகம் கோணாது தேவையான உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். **குடும்பத்தினர்.**



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி விஸ்வலிங்கம் சசிகலா

*(மீனா)*

**ஆறாத்துயரில்விட்டு மீளாத் துயில்
கொண்ட அன்புச் செல்வமே...!
மாதம் ஒன்று ஆனாலும்
ஆறாது எங்கள் துயர்
ஆத்மா சாந்தியடைய இறையருள்
வேண்டுகின்றோம்.**

தகவல்:
ஏ.விஸ்வலிங்கம் (கணவர்) மற்றும்
சோமசுந்தரம் (லண்டன்)

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

குடும்ப நண்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமத்தில் முதல் தடவையாக நடந்த எல்லே போட்டியில் அருணோதயா சம்பியன்

வலி.வடக்கு,மே28

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே முதல் தடவையாக 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கு இடையே இடம்பெற்ற எல்லே சுற்றுப்போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய அருணோதயாக் கல்லூரி 09 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து 10 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் ஓட்டங்களைப் பெற களமிறங்கிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியினால் மிகவும் கூடிய ஓட்டங்களாக காணப்பட்டமையால் இலகுவாக ஓட்டங்களைப் பெறமுடியவில்லை.

ஆனபோதிலும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்கள் தமது திறமையைக் காட்டி விளையாடினார்கள் என்றே கூறலாம். ஆட்ட நிறைவில் அருணோதயாக் கல்லூரி 09:04 என்ற புள்ளிகள் அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்று வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை 2:0 புள்ளிகள் என்ற அடிப்படையில் அருணாசலம் வித்தியாலயத்தை வெற்றிகொண்டு 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

யாழ்.மாவட்டத்தில் எல்லே விளையாட்டுப் போட்டி வலிகாமம் கல்வி வலயத்தில் முதல் தடவையாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போட்டிகளில் மேற்குறிப்பிட்ட பாடசாலைகளுடன் பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியுமாக மொத்தம் எட்டுப் பாடசாலைகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

## 19 வயது ஆண்கள் பிரிவுக் கரப்பந்தாட்டம்: சோமஸ்கந்தா வென்று கேடயம் சுவீகரித்தது

வலி.வடக்கு,மே28

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் நான்கு சுற்றுக்கள் விளையாடிய நிலையில் வெற்றியை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி தனதாக்கியது.

ஆரம்பம் முதல் இறுதிவரை இரு அணிகளும் பெரும் உற்சாகத்துடன் விளையாடியபோதிலும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் அபாரமான விளையாட்டுக் காரணமாக 3:1 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் சோமஸ்கந்தாக் கல்லூரி வெற்றி பெற்றுக்கொண்டது.

முதல் சுற்றில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி 25:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவது சுற்றில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தனது திறமையை வெளிப்படுத்தி 25:20 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுக்கொண்டது.

அடுத்த சுற்றுக்கள் இரண்டைத் தொடர்ந்து வெற்றி பெறவேண்டும் என்ற இலக்குடன் இரு அணிகளும் மோதிக்கொண்டன. ஆனபோதிலும் வெற்றி இலக்கை பெரும் சிரமத்தின் மத்தியில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி தனதாக்கிக்கொண்டது.

மூன்றாவது, நான்காவது சுற்றுக்கான புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி 25:18, 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்று யாழ்.மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் அச்சுவேலி மகாவித்தியாலயமும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் பெரும் முயற்சியெடுத்து விளையாடியபோதிலும் வெற்றி அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கே கிடைத்தது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை அச்சுவேலி மகா வித்தியாலயம் 25:20, 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தை வெற்றிகொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (1-86)

## உதைபந்தாட்டம்

கரவெட்டி,மே28

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் சிவானந்தா வி.கவும், பொம்மேர்ஸ் வி.கவும் மோதுகின்றன.

(203-70)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மே28

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

(1-207)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## யாழ்.பிரதேச பெண்கள் கிரிக்கெட் ஆட்டம்; கேடயத்தை தனதாக்கியது "போர்ஸ்ரார்"

யாழ்ப்பாணம்,மே28

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையான அரை இறுதி மற்றும் இறுதி துடுப்பாட்ட ஆட்டங்கள் கடந்த வாரம் சனிக்கிழமை நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் 'போர்ஸ்ரார்' பெண்கள் துடுப்பாட்ட அணி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

ஈச்சமோட்டை 'விருட்சம்'' இளைஞர் மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. விளையாட்டு அலுவலர் தலைமையில் நடந்த 5 ஓவர் கொண்ட இந்தப் போட்டிகளில் ஒவ்வோர் அணியிலும் தலா 6 துடுப்பாட்ட வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

சுற்றுப்போட்டியில் முதலாவது அரை இறுதிக் ஆட்டத்தில் 'போர்ஸ்ரார்' கழகத்தை சென்.அன்ரனிஸ் கழகம் எதிர்த்தாடியது.

முதலில் தடுப்பெடுத்தாடி போர்ஸ்ரார் அணி 5 பந்துப் பரிமாற்ற முடிவில் விக்கெட் இழப்பின்றி 60 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

17 பந்துகளை எதிர்கொண்ட எஸ்.சுதர்சினி 8 பவுண்டறிகளுடன் 44 ஓட்டங்களையும் 13 பந்துகளை சந்தித்த எஸ்.கௌதினி இரண்டு பவுண்டரிகளுடன் 15 ஓட்டத்தையும் பெற்றுக்கொண்டனர்.

சளைக்காமல் எதிர்த்தாடிய அன்ரனிஸ் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 47 ஓட்டங்களை மட்டுமே இறுதியில் பெற்றுக்கொண்டது. அவ்வணி சார்பாக துடுப்பெடுத்தாடிய பி.பிந்துஜா 2 சிக்சர், 2 பவுண்டரி உட்பட 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

போர் ஸ்ரார் அணிக்காக பந்து வீசிய வி.கஜிந்தா இரு பந்துப் பரிமாற்றங்களில் 8 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினார்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென்.றோக்ஸ் கழகத்தை சென்.நீக்கிலஸ் அணி எதிர்த்து விளையாடியது. துடுப்பெடுத்தாடிய நீக்கிலஸ் 17 ஓட்டங்களுடன் ஆட்டத்தை முடித்தது. இலகுவாக சென்.றோக்ஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி போர்ஸ்ராருடன் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற போர்ஸ்ரார் முதலில் துடுப்பெடுத்தாடி 4 விக்கெட் இழப்பிற்கு 50 ஓட்டங்களைப் பெற்றது. வி.கஜிதா 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். றோக்ஸ் அணியின் பந்து வீச்சாளர் எஸ்.மாலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றோக்ஸ் அணி 5 பந்து பரிமாற்ற முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

போர்ஸ்ரார் கழகம் சம்பியனாகவும் சென்.றோக்ஸ் இளைஞர் கழகம் இரண்டாம் இடத்திற்கும் தெரிவுசெய்யப்பட்டன.

(1-302)



*யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொள்வதையும் -*
*வெற்றியீட்டிய பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை வீராங்கனைகள், ஆசிரியர்கள் பயிற்றுவிப்பாளருடன் காணப்படுவதனையும் படங்களில் காணலாம்.* *(படங்கள்: நேசன்)*

# ஜொலிஸ்ரார் சுற்றுப்போட்டி

## திருநெல்வேலி 6 விக்கெட்டுகளால் வெற்றி

வலி.வடக்கு,மே28

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டமொன்றில் திருநெல்வேலி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்போஸ் விளையாட்டுக்கழகமும் திருநெல்வேலி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்போஸ் விளையாட்டுக் கழகம் 27.3 ஓவர்களில் 130 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

திலீபன், பிரகலாதன் தலா 24 ஓட்டங்களையும் கலாதீபன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சுரேஷ் 04 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் கௌசிகன் 5.3 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கோபி 06 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் மற்றும் லவகாந், பிரதீஸ்வரன், சைலேஸ்வரன் முறையே 04, 09, 25 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி விளையாட்டுக்கழகம் 21.3 ஓவர்களில் 04 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 131 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கௌசிகன் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களையும், சுரேஷ் 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 27 ஓட்டங்கள் எதிரணியினால் வழங்கப்பட்டது.

விஷ்ணு ஒரு ஓவர் பந்துவீசி 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பிரகலாதன், ரவிசங்கர், [illegible] முறையே 20, 25, 26 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (1-86)

## பற்றீஸியனும் 6 விக்கெட்டுகளால் வென்றது

வலிவடக்கு,மே28

யாழ்ப்பாணம் ஜொலிஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய விலகல் முறையிலான கிரிக்கெட் போட்டியொன்றில் யாழ்ப்பாணம் பற்றீஸியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஓர் ஓட்டத்தினாலும் ஆறு விக்கெட்டுகளினாலும் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியொன்றில் வடமராட்சி ஈகிள் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் பற்றீஸியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஈகிள் விளையாட்டுக் கழகம் 22.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

முரளிதரன் 30, திவ்வியன் 25, அருண் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

லவதீசன் 5.3 ஓவர்களில் 19 ஓட்டங்களைக் கொடுத்து 04 விக்கெட்டுகளையும் ஜக்சன், நிலோஜன் தலா 05 ஓவர்கள் பந்து வீசி முறையே 23, 25 ஓட்டங்களைக் கொடுத்து தலா 02 விக்கெட்டுக்களையும் சுஜீவன் 03 ஓவர்கள் பந்து வீசி 07 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெத்தாடிய பற்றீஸியன்ஸ் விளையாட்டுக் கழகம் 18 ஓவர்களில் 04 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 127 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஜெயந்திரன் 39, லவதீசன் 29, நவதீபன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

அசோக் 04 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் அமர்நாத், அருண் முறையே 12, 15 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து




வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தில் வசிக்கும் E.K.அருளானந்தன் - ரதீஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன் **விசாகன்** (விசால்) தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (28.05.2008) புதன்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவர் நயினாதீவு நாகபூசணி அம்மாளின் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் வாழ்த்துகின்றார்கள்.

கண்ணபுரம்,
6ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு.

(77454)



# திருமண வாழ்வில் பொன்விழா

இல்லற வாழ்வில்
இன்றுடன் (28.05.2008) 50 வருடங்களை
நிறைவு செய்யும் காரைநகர்
பண்டித்தாழ்வைச் சேர்ந்த
**குமாரசாமி மகேஸ்வரி**
தம்பதியரை பல்லாண்டு காலம் சீரும்
சிறப்புடனும் வாழ
ஈழத்துச் சிதம்பர தில்லைக்
கூத்தனின் அருளாசியை
வேண்டுகின்றோம்.

பண்டித்தாழ்வு,
காரைநகர்.

**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

(சி/552986)

# நீங்காத நினைவில் 20ஆம் ஆண்டு துயர அஞ்சலி

அமரர்
## சங்கரப்பிள்ளை கிருஷ்ணராசா
(நியூஸ் பேப்பர் ஏஜண்ட், இணுவில்)

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 07.02.1940 | 07.06.1988 |
| றங்கூன் | யாழ்.நகர் |



பரிவோடும் பாசத்தோடும்
எம்மை அரவணைத்த அப்பாவே!
அணையாத தீபமாய் கண்ட கனவு
நனவாகு முன்னே காலனவன் சடுதியாய்
அழைத்தது ஏனோ?

*" இந்நாடும் இந்நிலமும்
இப்பெரு வாழ்வும் வீடும் பொய்யாமென
இப்பொன்னாடன் திருவடிக்கே
தலை வைத்த தலைவா!*

இல.61, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(சி/552992)

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கணபதிப்பிள்ளை சிவஞானம்
(பிரபல வர்த்தகர், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

திதி: அட்டமி (28.05.2008)

மண்ணில்: 03.11.1932 — விண்ணில்: 08.06.2007

**பாசமென்னும் மழை பொழிந்து பக்குவமாய்
நாம் மிளிர பல வழி செய்த தெய்வமே!
இப்பாரினிலே நாம் மேலுயர தூய பல
சிந்தனைகள் விதைத்து வைத்தீர்!
ஆதலினால் நாம் உயர்ந்தோம்
எம்முயர்வு காணா உங்கள் உயிர் பிரிந்ததேனோ?
தேம்புகின்றோம் இன்றும் நாமே.**

144/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(74802)

தகவல்:
**குடும்பத்தினர்**
([illegible])

## பெரியபுராணம் தொடர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே28

காரைநகர், மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பெரியபுராணம் தொடர் சொற்பொழிவு கடந்த வாரம் தொடக்கம் இடம் பெற்று வருகின்றது.

ஆலயப் பெருந் திருவிழா கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இந்த திருவிழாக் காலத்திலே யாழ். பல்கலைக்கழக கலைப் பட்டதாரியும் தமிழ் ஆசிரியருமான காரை. எஸ். கங்காதரன் பெரிய புராணம் என்னும் தலைப்பில் தொடர் விரிவுரையினைத் தினமும் இரவு 8 மணி தொடக்கம் 9 மணிவரை நிகழ்த்தி வருகின்றார்.

ஆலயத் தேர்த் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. தீர்த்தத் திருவிழா இன்று புதன்கிழமை இடம்பெறும்.

(203-205)

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே28

வலி.கிழக்குப் பிரதேச சபையின் கீழுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர் சத்துணவு விநியோகத்திட்டம் தொடர்பாகவும் ஆசிரியர்களைத் திட்டத்தில் இணைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் வருகை தருமாறு பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார்.

(203)

# நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு — இரண்டாம் ஆண்டு



| அமரர் | | திருமதி |
|---|---|---|
| இளையதம்பி இராசையா | | இராசையா சோதிமலர் |
| 28.10.1935 | மலர்வு | 12.04.1940 |
| 24.05.2007 | உதிர்வு | 10.04.2006 |

திதி: அட்டமி

கல்வியில் உயர வைத்தீர்கள் கவலைகள் மறக்க வைத்தீர்கள்
நல்வழி காட்டி வைத்தீர்கள் அப்பா! நான் வாழ வழி சமைத்தீர்கள்.

அம்மா, அப்பா நான் உயிருள்ள வரை உங்களையும் மறக்க மாட்டேன்.
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"மலர் மகள்",
அல்வாய் வட.மேற்கு, அல்வாய்.

தமிழழகன் ரேவதி, ஜோதி
(குடும்பத்தினர்).

என் அன்புச் சின்னண்ணாவை
எம் உயிரிருக்கும் வரை மறக்கமாட்டோம்.


47/1, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(74433)

அன்புத் தங்கை குடும்பத்தினர்.
தகவல்: சின்னையா.

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 18 |
| 02 | 04 |
| 1944 | 2008 |



## அமரர் கனகு நாகமணி
(பெயின்ரர்)

28.05.2008

18.04.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் 41ஆம் நாள் நினைவுதினம் இன்று (28.05.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:

அரசடி வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

(74496)

**மனைவி,
பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அப்பாவிகளை இலக்கு வைப்பது கண்டிக்கப்பட வேண்டியதே!

''பொதுமக்களை இலக்கு வைக்காதீர்கள். அப்பாவிகளை இலக்கு வைக்கக் கூடாது என்பதைப் பயங்கரவாதிகளுக்கு ஊடகங்களும் எடுத்துச் சொல்லவேண்டும்.''

- இவ்வாறு பத்திரிகைகளின் ஆசிரியர்களை அழைத்து அவர்களுக்கு உபதேசம் செய்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஊடகவியலாளர்கள் - குறிப்பாக ஊடகப் பொறுப்பாளர்கள் - முன்னெடுக்கவேண்டிய முக்கிய பணி ஒன்றை நினைவூட்டியிருக்கின்றார் இலங்கைத் தேசத்தின் ஜனாதிபதி.

சரி. இந்தப் பணியை முன்னெடுப்பதற்குப் பொறுப்பான ஊடகங்கள் இவ்வேலையை எப்படிச் செய்யப்போகின்றன என்பதே கேள்வி. அப்பணியைச் செய்வதற்கு ஊடகப் பொறுப்பாளர்களுக்கு சில வரைவிலக்கணங்கள் தெரிந்திருப்பது - புரிந்திருப்பது - அவசியமானது; கட்டாயமானது.

அப்பாவிப் பொதுமக்கள் எனப்படுவோர் யார்? ஆக, வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியில் வசிக்கும் சிவிலியன்கள் மட்டும்தான் அப்பாவிப் பொதுமக்களா? அல்லது வன்னியில் வசிக்கும் சிவிலியன்களும் அப்பாவிப் பொதுமக்களா? அல்லது வன்னியில் பெரும்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அங்கு வாழ்பவர்கள் எல்லோருமே 'பயங்கரவாதிகளாகவே' அடையாளப்படுத்தப்பட வேண்டுமா? - இவை முக்கியமான கேள்விகள்.

இவை தவிரவும் ஊடகவியலாளர் தரப்பிடம் - குறிப்பாகத் தமிழ் ஊடகவியலாளர்களிடம் - மற்றொரு நியாயமான கேள்வியும் உண்டு.

எது பயங்கரவாதம்? - என்பதே அது.

அரசும் ஜனாதிபதியும் கூறுவது போல - வியாக்கியானப்படுத்துகின்றமை போல - 'பயங்கரவாதிகளான' விடுதலைப் புலிகள் மேற்கொள்கின்ற வன்முறைகள் மட்டும்தாம் பயங்கரவாதமா? அல்லது தமிழர் தரப்புக் கூறுவது போல சட்டத்தின் ஆட்சி என்ற பெயரில் தமிழர் தேசம் மீது அரச படைகளினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமை எனச் சுட்டிக்காட்டப்படும் 'அரச பயங்கரவாதமும்' இதற்குள் அடங்குமா?

இந்தக் கேள்விகள் குறித்துத் தமக்குள் சரியான விடைகளைக் கண்டு பிடித்துத் தெளிவான நிலைப்பாடு ஒன்றை எடுக்க முடியாத பின்னணியில் போலும், ஜனாதிபதி கோரும் 'அப்பாவிகள் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புக் காட்டும் பிரசாரத்தை' முன்னெடுக்க முடியாமல் ஊடகவியலாளர்கள் தடுமாறுகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினாலும், காட்டாவிட்டாலும் நேற்றுமுன்தினம் தெஹிவளை அருகே ரயிலில் வெடிக்கவைக்கப்பட்ட குண்டுத் தாக்குதல் போன்ற - அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான - கொடூரத் தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட்டேயாகவேண்டும். அதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

பத்து அப்பாவிகளைப் பலிகொண்ட அத்தாக்குதலையும் அதற்குப் பின்புலத்தில் இருந்தவர்களையும் வன்மையாகக் கண்டிக்கும்போது, அதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் முறிகண்டியில் சிறுவர், பெண்கள் உட்படப் பதினாறு அப்பாவிகளின் உயிர்களைக் காவுகொள்ளும் கிளைமோர்க் குண்டுத் தாக்குதலையும், அதன் சூத்திரதாரிகளையும் கூட அதே அழுத்தத்தோடும், உறுதியோடும் கண்டிக்க ஊடகத் தரப்புகள் முன்வரவேண்டும்.

அதுமட்டுமல்ல. இத்தகைய கொடூரங்கள் தொடர்பான விடயத்தில், இலங்கையில் உள்ள அனைத்து மக்களினதும் சட்டபூர்வமான அரசு எனக் கூறிக்கொள்ளும் இந்த ஆட்சி எப்படி நடந்து கொள்கிறது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது அவசியமானதாகின்றது.

அரசு குறிப்பிடுவது போல - தெற்கில் இடம்பெறுகின்ற பயங்கரவாதத் தாக்குதல்களில் அப்பாவி சிவிலியன்கள் கொல்லப்படும்போது, அல்லது காயமடைகின்றபோது - அக் கொடூரத் தாக்குதலில் ஏற்பட்ட காயத்தின் இரத்தம் உறைவதற்கு முன்னரே அரசுத் தரப்பின் அமைச்சுப் பட்டாளங்கள் அங்குபோய் நின்று பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்க முண்டியடிக்கின்றன. ஆனால் வன்னியில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றவை போன்ற கொடூரங்கள் நடக்கும்போது அதில் பாதிக்கப்படும் அப்பாவிப் பொதுமக்கள் குறித்து அரசு அலட்டிக் கொள்வதேயில்லை. ஏன் அவ்வாறு கொல்லப்பட்ட அப்பாவிகள் தமிழர்கள் என்பதால் - அவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கொல்லப்பட்டவர்கள் என்பதால் - அவர்கள் அனைவரும் 'பயங்கரவாதிகள்' ஆகியிருக்கின்றனரா? எனவே அங்கு இத்தகைய தாக்குதல்களில் உயிரிழக்கும் அல்லது காயமடையும் அனைவரும் 'பயங்கரவாதிகள்' என்பதால் அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவது அரசின் பொறுப்பல்ல என்பது அரசின் கருத்தா?

எனவே, அப்பாவிகள் மீதான தாக்குதலை நிறுத்தும்படி பயங்கரவாதிகளை வற்புறுத்துங்கள் என்று கோரும் ஜனாதிபதியும் அவரது அரசும் 'யார் பயங்கரவாதிகள்?', 'எது பயங்கரவாதம்?' என்பதையும் ஒரு தடவை தெளிவுபடுத்தினால் நல்லது.

உலகைத் திருத்துவது - நாட்டைத் திருத்துவது - சமூகத்தைத் திருத்துவது - இவையெல்லாம் முதலில் வீட்டைத் திருத்துவதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

அப்பாவிகளை இலக்கு வைப்பதைத் தவிருங்கள் என்ற நீதியான பிரசாரத்தை முன்னெடுப்பதற்கான எத்தனத்துக்கும் கூட இது பொருந்தும் என்பதை சம்பந்தப்பட்டோர் கருத்தில் கொள்வது எப்போது?

---

மேல்மாகாணப் பாடசாலைகளில்

# இப்போது தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களை ஜூன் 30 இற்குப் பின்னர் கடமைக்கு அனுமதிக்க வேண்டாம்

## கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

அச்சுவேலி, மே 28

மேல் மாகாணப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களை ஜூன் 30 ஆம் திகதிக்கு பின்னர் தற்காலிக இணைப்புக் கடமைக்கு அனுமதிக்க வேண்டாம் என மேல் மாகாண கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துள்ளார்.

மேல் மாகாணப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்ட வேளையில் அவர்களின் தற்காலிக இணைப்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11 ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளினால் வடக்கு மாகாணத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களில் பலர் தமது கடமை நிலையங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாமல் இடம்பெயர்ந்த நிலையில் உள்ளனர். இவர்களில் மேல் மாகாணத்தில் கொழும்பு கல்வி வலயம் உட்பட கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களது சேவையை ஜூன் 30 ஆம் திகதிக்கு பின்னர் பாடசாலைகளில் அனுமதிக்க வேண்டாம் என மேல் மாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் வி. டபிள்யூ. பியரட்ணா அறிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த நிலையில் வடக்கு மாகாணத்துக்கு வெளியில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு இதுவரை சம்பளக் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை.

இவர்களுக்கு மாதாந்த சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த வேளையில் மேல் மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களின் தற்காலிக இணைப்பு முடிவுக்கு கொண்ட வரப்பட்டுள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர் என்று கூறப் பட்டுள்ளது. (203-11)

# மின் 'கேபிள்கள்' விழும் நிலையில்; வீதியால் செல்வோர் பெரும் அவதி!

யாழ்ப்பாணம், மே 28

கைதடி கிழக்கு அண்ணமார் ஆலயத்திற்கு அண்மையாக இருக்கின்ற மின் கம்பங்களில் உள்ள மின் 'கேபிள்கள்' விழும் நிலையில் அங்கு நிற்கும் மரங்களில் முட்டி மின் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அப்பகுதியில் செல்லும் பொதுமக்கள் உயிராபத்துக்களை எதிர்நோக்கும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மின் கேபிள்கள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக அங்கு நிற்கின்ற பூவரசு போன்ற மரங்களில் முட்டிய நிலையில் உள்ளன.

இது சம்பந்தமாக மின்சார சபையினருக்கு பலமுறை நேரடியாக சென்று முறையிட்ட போதும் அவர்கள் இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் அதிகாலை வேளைகளில் இவ்வீதியில் செல்லும் பொதுமக்களும் பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களும் பெரும் உயிராபத்துக்களை எதிர்நோக்க வேண்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இந்த விடயத்தில் மின்சாரசபையினர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இனிமேலும் இந்த விடயத்தில் அசட்டையீனமாக இருக்க வேண்டாம் என இப்பகுதி மக்கள் மின்சார சபையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (203-288)

# நெல்லியடி ம.ம.வித்திக்கு உள்ளக விளையாட்டரங்கம்

கரவெட்டி,மே28

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள இராமலிங்கம் கலாசார மண்டபம் வித்தியாலயத்தின் உள்ளக விளையாட்டரங்கமாக மாற்றப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தற்போது நவீன வசதிகளுடன் இந்த மண்டபம் விளையாட்டு அரங்கமாக புனரமைக்கப்பட்டு வருவதாக வித்தியாலய அதிபர் செ.சேதுராஜா தெரிவித்தார்.

இதே வேளை - பாடசாலையின் நடைபாதைக்களும் புதுப்பொலிவுடன் திருத்தப்பட்டு வருகின்றன. திருத்த வேலைகளுக்குரிய நிதியை பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்க லண்டன் கிளை ஆகியன வழங்கி வருகின்றன. (203-70)

# மேற்குலக நாடுகள் ஆதிக்கத்தின் கீழ் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவா?

## அடியோடு மறுக்கின்றார் அதன் தலைவர் உடலகம

கொழும்பு, மே 28

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாட்டில் மேற்குலக நாடுகள் ஆதிக்கம் செலுத்திகின்றன எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை மேற்படி ஆணைக்குழுவின் தலைவர் நிஸங்க உடலகம அடியோடு மறுத்திருக்கின்றார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச பிரசித்த பெற்ற நபர்களின் சுயாதீன குழுவிற்கென ஒதுக்கப்படவிருந்த நிதியை எமக்கு வழங்குவதற்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திரிகள் இணங்கியுள்ளனர்.

மேற்குலக நாடுகள் குழுவின் சர்வதேசப் பணிகளுக்கென இரண்டு வருடகால பகுதிக்கு நிதியை ஒதுக்கியிருந்தன. இந்நிலையில் சர்வதேச குழுவினர் தமது பணிகளை முடித்துக்கொண்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ள சாட்சிகளிடமிருந்து வீடியோ ஊடாக அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்காகவே சர்வதேச குழுவிற்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

வெளிநாடுகளில் உள்ள மூவர் வீடியோ தொழில்நுட்பம் மூலம் சாட்சியமளிக்கத் தயாராகவும் இருந்தனர். எனினும் இதற்கான போதிய நிதிவசதிகள் அப்போது இருக்கவில்லை.

சாட்சியங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாமையே விசாரணைகள் எதிர்கொள்வதில் பாரிய சவாலாக உள்ளது எனவும் கூறினார். (சி)

# ஹக்கீம் மீண்டும் எம்.பி. ஆவாரா? விரைவில் முடிவு தெரிய வருமாம்!

கொழும்பு, மே.28

எம்.பி.பதவியை இராஜினாமாச் செய்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு மாகாண உறுப்பினராகத் தெரிவாகியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தேசிய பட்டியல் மூலம் மீண்டும் எம்.பியாக நாடாளுமன்றம் செல்வரா இல்லையா என்பதை அக் கட்சியின் அரசியல் விவாகாரக்குழு விரைவில் தீர்மானிக்கும்.

இத்தகவலை ஹக்கீமே தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் தேசிய பட்டியல் மூலம் மீண்டும் ஹக்கீம் எம்.பியாகப் போகிறார் என்று தகவல் கிடைத்துள்ளது. அது உண்மையா என ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நான் மீண்டும் எம்.பியாகி நாடாளுமன்றம் செல்வதா இல்லைய என்பது குறித்து நாம் முடிவெடுக்கவில்லை.

எனது கட்சியின் அரசியல் விவகாரக் குழு இதுதொடர்பாகக் கூடி இறுதி முடிவு ஒன்றை எடுக்கும். நாம் இப்போது அந்த விடயத்தில் கவனம் செலுத்தவில்லை. இங்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள முஸ்லிம்களுக்கு எதிரான - வன்முறை நடவடிக்கைகளைத் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் விடயத்திலேயே அதிக கவனம் செலுத்தி வருகிறோம். என்றார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மு.க.தலைவர் ரவூப் ஹக்கீம் பஷீர் சேகுதாவூத் மற்றும் ஹஸன் அலி ஆகியோர் தமது எம்.பி. பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டு கிழக்கு மாகாணத் தேர்தலில் முறையே திருகோண மலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்டு மாகாண சபைக்குத் தெரிவானவர்கள் என்பது தெரிந்ததே. (சி)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 16 | 29.05.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: நவமி | பி.ப. 02.20வரை |
| நட்சத்திரம் : | பூரட்டாதி |
| | பி.ப. 04.07 |
| சுபநேரம் : | 07.22-08.52 |
| இராகுகாலம் : | 01.22-02.52 |

# தனியார் துறை ஊழியர்களுக்கு 15% முதல் 25% வரை சம்பள உயர்வு

கொழும்பு, மே 28

நாட்டில் தனியார்துறை ஊழியர்களுக்குப் 15முதல் 25 சதவீதம் வரையிலான சம்பள உயர்வை வழங்குவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாகத் தொழில் உறவுகள் மற்றும் மனிதவள அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக் காரணமாக நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வகையிலேயே இந்த உயர்வை வழங்க முடிவெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் அதாவுட மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-


இந்த நாட்டில் நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதனால் தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைப்படி சம்பள நிர்ணய சபையுடன் நடத்திய பேச்சின் அடிப்படையிலேயே தனியார் துறை ஊழியர்களுக்கான சம்பள உயர்வை மேற்கொள்ளும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொதுமக்களின் அரசு என்ற வகையில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு பெரிதும் கடமைப் பட்டுள்ளது. - என்றார் அவர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயிலிருந்து படங்களையும் தகவல்களையும் அனுப்பத் தொடங்கியுள்ளது 'பீனிக்ஸ்' ஆய்வுக்கலம்


அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவுக்குச் சொந்தமான 'பீனிக்ஸ் லாண்டர்' (Phoenix Lander) என்று அழைக்கப்படும் செவ்வாயில் உயிரினங்களின் பெறுதிகள் மற்றும் நீர் இருப்புக்கான சான்



றுகளைத் தேடச் சென்றுள்ள ஆய்வுக்கலம், செவ்வாயின் மேற்பரப்பில் நாசா விஞ்ஞானிகள் நிச்சயித்தபடி வெற்றிகரமாகத் தரையிறங்கியுள்ளமை தெரிந்ததே.


விண்வெளியில் இருந்து செவ்வாயின் அடர்ந்த காற்று மண்டலத்தினுள் சுமார் மணித்தியாலத்திற்கு 21,000 கிலோமீற்றர்கள் என்ற வேகத்தில் பிரவேசித்த இக்கலம் பரசூட் உதவியுடன் தன் வேகத்தை ஒரு மனிதனின் அவசர நடைக்குரிய வேகத்துக்குக் குறைத்துக்கொண்டு இறுதியில் அதன் 3 கால்களையும் சரியான முறையில் செவ்வாயின் தரைமீது பதித்துக்கொண்டுள்ளது.

இது இடம்விட்டு இடம் நகரும் ஆற் றல் அற்றது. இதற்கு முன்னர் 2004இல் நாசா அனுப்பிய இரண்டு ரோவர்களான ஸ்பிரிட் மற்றும் ஒப்பசுனிற்றி ரோவர்கள் நகரும் தன்மை உடையன. ஆனால் அவற்றால் செவ்வாயின் மேற்பரப்பில் இருந்து மாதிரிகளைத் திரட்டி பகுப் பாய்வுகளைச் செய்யும் திறன் அதிகம் இருக்கவில்லை. ஆனால் பீனிக்ஸ் தன்னுடன் கொண்டுள்ள தன்னியக்க பொறியில் இயங்கவல்ல கையைக் கொண்டு மாதிரிகளைத் திரட்டி, ஏலவே அதில் பொருத்தப்பட்டுள்ள பௌதீக மற்றும் இரசாயனப் பகுப்பாய்வு உபகரணங்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வுகளைச் செய்து அதன் தரவுகளைப் பூமிக்கு அனுப்பும் வல்லமை கொண்டது மட்டுமன்றி நின்ற இடத்தில் இருந்துகொண்டு சுற்றயலைப் படம் பிடிக்கும் மற்றும் சூழலின் தன்



மைகளைப் பௌதீக ரீதியில் உணரும் திறனும் அதற்கு உண்டு. அதற்கேற்ற வகையில் அதில் பல விஞ்ஞானப் பகுப்பாய்வு உபகரணங்களுடன் உணரிகளும் ஒளிப்படக் கருவிகளும் (கமராக்களும்) பொருத்தப்பட்டுள்ளன.

'பீனிக்ஸ்' அனுப்பிய செவ்வாயின் மேற்பரப்புப் பற்றிய படங்களையே நாசா தற்போது ஊடகங்களுக்கு வெளியிட்டு வருகிறது. அடுத்துவரும் சில தினங்களில் 'பீனிக்ஸ்' தனது பகுப்பாய்வுச் செயற்பாட்டையும்



வெற்றிகரமாகச் செய்ய ஆரம்பித்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த காலங்களில் பூமியில் இருந்து செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட சுமார் 50% கலங்கள் வெற்றிகரமாக தரையிறங்கத் தவறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாசாவினால் செவ்வாய் நோக்கி அனுப்பப்பட்டு தோல்வியில் முடிந்த கலங்களின் சாம்பலில் இருந்து உருவானது என்பதை நினைவு கூரவே இக்கலத்துக்கு பீனிக்ஸ் (Phoenix) என்று பெயரிட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செவ்வாய்க்குப் பூமியிலிருந்து மனிதன் உருவாக்கிய செயற்கைக் கலத்தை அனுப்பிய முதலாவது நாடு ரஷ்யா ஆகும். அந்த நாடு 1960ஆம் ஆண்டு தனது முதற் கலத்தை செவ்வாய் நோக்கி ஏவியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. விண்ணியல் ஆய்வுகளைப் பொறுத்தவரை சரித்திரத்தை ஆரம்பித்து வைத்து மனித குலத்துக்கு பெருமை சேர்த்தவர்கள் ரஷ்யர்கள் என்றால் அது மிகையல்ல.

## ஆற்றல்கள் பல மிகுந்தது "பீனிக்ஸ்"

தரையிறங்கிய Phoenix ஆய்வுக்கலம் அனுப்பியுள்ள படங்களினை ஆதாரமாகக் கொண்டு பல தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இதுவரை அது அனுப்பியுள்ள படங்களில் செவ்வாயின் மேற்பரப்புப் பாறைகள் மற்றும் கூறுகள் பற்றிய படங்களும் பீனிக்ஸ் கலத்தின் சூரியக் கலத் தட்டுக்கள் சரியான வகையில் விரிந்திருக்கும் படங்களும் கலத்தின் மூன்று கால்களில் ஒன்று சரிவர செவ்வாய் மேற்பரப்பில் பதிந்து நிற்கும் காட்சிகளும் பிரமிக்க வைப்பனவாக அமைந்துள்ளன.

பீனிக்ஸின் இந்த வெற்றிகர தரையிறக்கத்தை நாசா விஞ்ஞானிகள் அக்கலம் தரையிறங்கித் தகவல்களை அனுப்பத் தொடங்கியதும் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர்.

பீனிக்ஸ் ஆய்வுக் கலம் ஒரிடத்திலேயே தொடர்ந்து தரித்து நின்று ஆய்வுகளைச் செய்யக்கூடிய தன்மை உடையது.

## மரண அறிவித்தல்

### பூபதி சிவசுப்பிரமணியம்



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூபதி சிவசுப்பிரமணியம் 25.05.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் புஸ்பலதா (கனடா), மணிவண்ணன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (இத்தாலி), அகிலன் ஆகியோரின் பாசமிகு தாயும் சிறீதரன் (கனடா), சுமங்கலா(பிரான்ஸ்), ராஜினி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமியும் கனகேந்திரன், சிவலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2008) புதன்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள், சகோதரி.**

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
(74801)

## விற்பனைக்கு

அல்சேஷியன் 40 நாள் நிரம்பிய ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**தாசன் பாம்,**
*158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*
(இ/552991)

## தவறிவிட்டது

புத்தூர் மேற்கு எனும் முகவரியுடைய செல்வராசா பறுவதம் என்பவரின் தேசிய அ.அட்டை (447540622V) கறுப்பு நிற சிறிய கைப்பேசுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் 22.05.2008 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புத்தூர் மேற்கு, நவக்கிரி சிவன் பேக்கரியில் ஒப்படைக்கவும்.
(74814)

## தவறிவிட்டது

ஆடியபாதம் வீதி, பலாலி வீதி, தொழில்நுட்ப நிறுவனம், கஸ்தூரியார் வீதி, லிங்கம் கூல் பாருக்குமிடையில் கைச்செயின் (1½ பவுண்) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் R.இராயேஸ்வரன், யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(இ/552994)

## மரண அறிவித்தல்கள்

### கதிரேசு துரைராசா



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், மணியகாரன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கதிரேசு துரைராசா (ஓய்வுபெற்ற பதவிநிலை உதவியாளர் - யாழ்.ரெலிகொம்) 25.05.2008 அன்று கனடா, ஒட்டாவாவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - தங்கம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் அன்னலட்சுமியின் (கனடா) அன்புக் கணவரும் Dr.றமணி ஜெயக்குமார் (வவுனியா பொது மருத்துவமனை), இராகவன் (பொறியியலாளர் - கனடா), இராகுலன் (பொறியியலாளர் - விரிவுரையாளர் - ஒட்டாவா பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமார் (சமூக சேவை உத்தியோகத்தர் - வவுனியா கச்சேரி), யாழினி (கணக்காளர் ஒட்டாவா), வனித்தா (பொறியியலாளர் - ஒட்டாவா) ஆகியோரின் அன்பு மாமனும் அமரர் பாக்கியம், அமரர் சுப்பிரமணியம், செல்லத்துரை, அன்னபூரணம், அமரர் சிவக்கொழுந்து, சின்னத்தங்கச்சி, அமரர் சண்முகம், அமரர் கோபாலபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் நிவேதிகா (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி), நிதர்சனன், நிதுரன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள்) மற்றும் கனடாவில் வசிப்பவர்களான கயிலன், லக்சன், ஆர்த்திகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2008) புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

594A, கொறவப்பொத்தானை வீதி,
வவுனியா.
தொ.பே.இல.: 024-2220207
(74801)

தகவல்:
**பரமலிங்கம் ஜெயக்குமார்**
(மருமகன்).

### திருமதி குணரட்ணம் அன்னலட்சுமி

**(குணமாமி)**



ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைச் சேர்ந்த குணரட்ணம் அன்னலட்சுமி அவர்கள் 27.05.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை குணரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் பாலசுப்பிரமணியம் (பிள்ளையார் ரான்ஸ்போட், சங்கானை), விஜயலட்சுமி, விஜயநாதன் (கனடா), விஜயகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
(74801)

தகவல்:
**கு.பாலசுப்பிரமணியம்**
[மணல், சல்லி விற்பனை நிலையம் - சங்கானை].

## இயந்திரம் பழுதுபார்த்தல் பயிற்சி நெறி

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களத்தினரால் கரவெட்டிப் பிரதேச செயலர் ஊடாக இயந்திரம் பழுதுபார்த்தல் பயிற்சி நடத்தப்படவுள்ளது.

6மாதங்கள் கொண்ட இப்பயிற்சி நெறிக்குத் தத்தம் கிராம சேவையாளர் ஊடாக அடுத்தம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் 'பிரதேச செயலாளர், கரவெட்டி' என்னும் முகவரிக்குவிண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## யோகாசன வகுப்புகள்

யாழ்.சிவலிங்க யோகாகேந்திரா நிலையத்தால் கட்டைப்பிராய் முத்துமாரி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் யோகாசனப் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. (203)


உதயன் ஊடக அனுசரணையிலும்
ජාතික ඉතිරි කිරීමේ බැංකුව
தேசிய சேமிப்பு வங்கி
National Savings Bank
ஆதரவிலும்
SCIENCE ACADEMY NALLUR ARIYALAI JAFFNA

2007 -O/L மாணவர் கௌரவிப்பு விழா!

சயன்ஸ் அக்கடமி நல்லூர். அரியாலை.

இடம்: அக்கடமி பிரதான மண்டபம். காலம்: 01-06-2008.ஞாயிறு பி.ப: 2 மணி.

தலைவர்: திரு.எஸ்.ஸ்ரனிஸ்லாஸ். சிரேஷ்ட ஆசிரியர். சயன்ஸ் அக்கடமி

பிரதமவிருந்தினர்: திரு. K.அரியநாயகம். அவர்கள்.
மாவட்ட நீதிபதி. பருத்தித்துறை.

கௌரவ விருந்தினர்: திரு. V.அருளானந்தம். அவர்கள்.
முகாமையாளர். தேசிய சேமிப்பு வங்கி. யாழ்ப்பாணம்.

சிறப்பு விருந்தினர்கள்: திரு. K.பாலசுப்ரமணியம். அவர்கள்.
பிரதம முகாமையாளர். உதயன். யாழ்ப்பாணம்.
திரு.N.விஜயசுந்தரம். அவர்கள்.
பிரதம ஆசிரியர். வலம்புரி. யாழ்ப்பாணம்.
திரு.K.கணேசபிள்ளை. அவர்கள்.
பிரதம முகாமையாளர், இலங்கை போக்குவரத்துச் சபை. யாழ்ப்பாணம்.

50 மாணவர்கள் பாராட்டுப் பெறுகின்றனர்.

"என்றுடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோர்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்துணவு வழங்கல்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கும், மாநகர சபையின் எல்லைக்கும் உட்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கான சத்துணவு வழங்கும் நிகழ்வு நாளை பிற்பகல் 2மணிக்கு மாநகரசபையில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளிகளின் பொறுப்பாசிரியர்களை சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

# மலேசியப் பணக்காரர்களில் 2ஆவது இடம் யாழ். தமிழருக்கு!

கொழும்பு, மே28

மலேசியாவின் பணக்காரர்கள் பட்டியலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

மலேசியாவில் 'மெக்சிஸ் ரெலிகொம்' நிறுவனத்தை நடத்திவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரீ.ஆனந்தகிருஷ்ணனே (வயது 70) இவ்வாறு பணக்காரர் பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

மலேசியாவில் முதல் 40 பணக்காரர்களை 'போபர்ஸ்' சஞ்சிகை பட்டியல் இட்டுள்ளது.

ரீ. ஆனந்தகிருஷ்ணனின் தேறிய சொத்து 7.2 பில்லியன் அமெரிக்கடொலர் என்று அந்தச் சஞ்சிகை தெரிவிக்கிறது. இவரது 'மெக்சிஸ் ரெலிகொம்' நிறுவனம் இலங்கையில் ஸ்ரீலங்கா ரெலிகொம் பங்குகளையும் இந்தியாவில் எயார் செல் நிறுவனப் பங்குகளையும் கொள்வனவு செய்துள்ளது.

இந்தப் பட்டியலில் ரொபேட் கூக் (வயது 84) என்பவர் 10 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்துடன் முதல் இடத்தில் உள்ளார்.

இதேவேளை - மற்றுமொரு இலங்கைத் தமிழரான ஜீ.ஞானலிங்கம் (வயது 63) 230 மில்லியன் அமெரிக்க டொலர் தேறிய சொத்துடன் 26 ஆவது இடத்தில் உள்ளார். (அ-2)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 ★ 02 ★ 1933 |  | 28 ★ 04 ★ 2008 |

### திருமதி நல்லம்மா இராசரத்தினம்

கடந்த 28.04.2008 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (28.05.2008) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (74826) - குடும்பத்தினர்.

## மாகாணப் போட்டிகள் வவுனியாவில்

யாழ்ப்பாணம், மே28

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுக்கள் மற்றும் மெய்வன்மைப் போட்டிகள் அடுத்த மாதம் 14ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை வவுனியாவில் இடம் பெறவுள்ளன.

மாகாண கல்விப் பணிப்பாளர் வி.இராசையா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக இந்தப் போட்டிகளில் சிலவற்றை அந்த அந்த மாவட்டங்களிலேயே நடத்த முன்னர் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தற்சமயம் வவுனியாவில் சகல போட்டிகளையும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் போட்டிகளின் விவரம் வருமாறு:-

* 14ஆம் 15ஆம் திகதிகள் - பூப்பந்தாட்டம், சதுரங்கம், மேசைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மென்பந்தாட்டம்.
* 16ஆம் திகதி - உடற்பயிற்சிப்போட்டி (ஆண்கள்/பெண்கள்).
* 17ஆம் திகதி - கரப்பந்தாட்டம் (ஆண்கள்), எல்லே (பெண்கள்).
* 18ஆம் திகதி - கரப்பந்தாட்டம் (பெண்கள்), கபடி (ஆண்கள்).
* 19ஆம், 20ஆம் திகதிகள் - உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், எல்லே (ஆண்கள்), கபடி (பெண்கள்).

22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை - மெய்வண்மைப் போட்டிகள். (1)

## தனிமையில் இருந்த 71 வயது மூதாட்டி தீயில் எரிந்து மரணம்

யாழ்ப்பாணம், மே28

குப்பி விளக்குச் சரிந்து விழுந்து தீப்பற்றியதால் தனிமையில் இருந்த மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி, தாளையடி வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராமலிங்கம் சிவயோகம் (வயது 71) என்பவரே எரிகாயங்களுக்கு ஆளாகி உயிரிழந்தவராவார்.

தனிமையில் இவர் இருந்த வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் இதன் போது குறிப்பிட்ட அறையினுள்இருந்தபொருள்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியதாகவும் கூறப்பட்டது.

எரிந்த உடலின் எஞ்சியபாகமே மீட்கப்பட்டதாக கோப்பாய் பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி ஆர்.வசந்தசேனன் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலத்தை யாழ். போதானா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (Ŵ03-25)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராமலிங்கம் சிவயோகம்

சரவனை மேற்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் சிவயோகம் (26.05.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசுவநாதன் - துளசியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான அண்ணாமலை, இளங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வடிவேல், யோகாம்பிகை, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ரேணுகா, அம்பிகைபாகன் (Dubai) ஆகியோரின் அன்புத் தாயும், தர்மலிங்கம், ஜெயந்தி ஆகியோரின் மாமியும், மதன்ராஜ், லவன் ராஜ், டிலான்ராஜ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2008) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.22, தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி. (74828)

தகவல்:
இ.அம்பிகைபாகன்,
(மகன்).

### தம்பையா இராசதுரை



60/6, இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா இராசதுரை (26.05.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம் தம்பதியரின் புதல்வரும், அமரர்களான சிவசாமி, இராசையா, அன்னலச்சுமி, சிவராசா மற்றும் துரைச்சாமி, தம்பிராசு, தர்மபூபதி, மங்கையர்க்கரசி, பங்கஜமலர், சர்வானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா ரொறன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

221/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (74829)

தகவல்:
தம்பையா சர்வானந்தன்,
(சகோதரன்).

### வேணுகோபால் ஆச்சாரி இராமன் (ஆர்ரி)



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேணுகோபால் ஆச்சாரி இராமன் ஆச்சாரி 26.05.2008 திங்கட்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேணுகோபால் ஆச்சாரி - ருக்குமணி ஆகியோரின் அன்பு மகனும், கௌரி முருகானந்தன் (கனடா), லெட்சுமணன்(கட்டார்), பரமானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பேரின்பநாதன், புனிதவதி, பிறேமா, தைரியலஷ்மி ஆகியோரின் மைத்துனரும் தர்ஷிகா, விசாகேசன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜனனி, லபிஜன், ஜனனி, வேனுஜன் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமன் சிற்பாலயம்,
306, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (74831)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### வைத்தியலிங்கம் நாகரத்தினம்



பலாலி தெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் நாகரத்தினம் 24.05.2008 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் இளையாச்சியின் செல்ல மகனும் பாலசிங்கம் - செல்லமுத்து (தெய்வானைப் பிள்ளை) தம்பதியரின் மூத்தமருமகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் அமரர்களான குணரத்தினம் (மலேசியா), நவரத்தினம் (மலேசியா), இராசரத்தினம் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை ) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயந்தினி (ஜேர்மனி), ஜெயறஞ்சினி (டென்மார்க்), ஜெயலோஜினி (ஜேர்மனி), ஜெயரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவிக்குமார் (ஜேர்மனி), கதிர்காமநாதன் (டென்மார்க்), புஸ்பரூபன் (ஜேர்மனி), கீதர்சனா (ஜேர்மனி), அஞ்சலா (சுவிஸ்), ரஜனி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் அவனிதரன் (சுவிஸ்), முரளிதரன் (சுவிஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் நிறோஜினி, யுதீஷன், நிறோஜன் (ஜேர்மனி), கரீஸ், ஜெனீஸ், அபிநயா (டென்மார்க்), தாட்சாஜினி, தாரணி (ஜேர்மனி), சினேகா, அஜய் (ஜேர்மனி), நிறோஜி, சாருஜன் (சுவிஸ்), கபிலன், மிதுலன், இனியவன் (சுவிஸ்) ஆகியோரின் செல்லப்பேரனும் நவரத்தினம், அமரர் மகேஸ்வரி, முத்தம்மா, கதிர்காமத்தம்பி (பிரான்ஸ்), முருகேஸ்வரன் (ஜேர்மனி), யோகராணி (ஜேர்மனி), புவனேஸ்வரி (ஜேர்மனி), சிவாணந்தம் (ஜேர்மனி), சிவக்கொழுந்து (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.05.2008 சனிக்கிழமை (Germany - Bonn) இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை வீதி,
(அச்சுவேலி பொலிஸ்
நிலையம் முன்பாக),
அச்சுவேலி. (சி-553008)

தகவல்:
ந. ரகுநாதன் (மருமகன்),
இ. முத்தம்மா (மைத்துனி).

### திருமதி சின்னம்மா கந்தப்பு

கரவெட்டி மத்தி, சாமியன் அரசடியைச் சேர்ந்த பொன்னம்பலம் கந்தப்புவின் மனைவி சின்னம்மா (பூமா புடைவை உரிமையாளர்) நேற்று (27.05.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்புவின் அன்பு மனைவியும், பாக்கியம், கருணாநிதி, அன்பழகன், மணியம்மை, ஆதித்தை, புனிதவதி, பாலவேந்தன், மலர்விழி ஆகியோரின் அன்புத் தாயும், குமாரசாமி, மங்களேஸ்வரி, யோகேஸ்வரி, நற்குணராசா, ரவீந்திரன், ஸ்ரீதரன், நளினி, தமிழ்ஞானம் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-553012)

தகவல்:
குமாரசாமி (மருமகன்)


COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
# 15, Sirambiyadi lane, Jaffna. Branch: #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE 021 222 8250, 0777222422

80% Off

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science<br>4 Months<br>~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science<br>5 Months<br>~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing<br>4 Months<br>~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Designing<br>4 Months<br>~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~10,000~~ 2,000 |
| Diploma in Auto CAD<br>3 Months<br>~~10,000~~ 2,000 | Diploma in Microsoft office<br>3 Months<br>1,500 | Accounting Package<br>3 Months<br>~~10,750~~ 2,150 |

50% OFF ADVANCE COURSES

Diploma In Multimedia ~~5500~~ 2750
Diploma In Video Editing ~~6500~~ 3250

கம்யூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத செய்முறைப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :30/05/20089 AM
Batch II :31/05/200811AM
Batch III :01/06/200811AM
Batch IV :04/06/20089 AM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவி மக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் செயல்களைக் கண்டிக்கிறேன்

## மக்கள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மே 28

அப்பாவி பொது மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து மிலேச்சத்தனமான செயற்பாடுகளையும் வன்மையாகக் கண்டிப்பதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சு அலுவலகத்துக்கு நேற்றுத் தம்மை சந்திக்க வந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் மத்தியில் உரையாற்று கையில் அவர் இப்படிக் கூறினார்.

எமது மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக ஆரம்ப காலகட்டங்களில் ஆயுதம் ஏந்திப் போராடியவர்களில் தனக்கும் முக்கிய பங்கு இருப்பதால், இன்று எமது மக்கள் படும் துன்ப துயரங்களில் இருந்து அம் மக்களை மீட்டெடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பும் இருப்பதால்தான் நேரடியாகவே யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்து மக்களோடு மக்களாக நின்று அம்மக்களின் குறைகளை இயலுமான அளவு தீர்த்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அப்பாவி மக்களின் நிம்மதியான வாழ்க்கையை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் பல்வேறு தீயசக்திகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் தங்களது மௌனம் கலைந்து முன்வர இப்போது ஆரம்பித்திருக்கிறார்கள். இதே நிலை மேன் மேலும் வளர வேண்டும். அவ்வாறானதொரு நிலை ஏற்படும்போதுதான் எமது மக்களுக்கான நிரந்தர நிம்மதி ஏற்படும் - என்றும் அவர் எடுத்துரைத்தார்.

இன்னும் ஒருவருட காலத்திற்குள் யாழ் குடாநாடு உட்பட வடக்கினை அனைத்து மாவட்டங்களிலும் முன்னேற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (அ-01)

## பயங்கரவாத.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகத் தெரிவித்தார்.

கொழும்பில் - அலரிமாளிகையில் - நேற்றுக்காலை ஊடகத் தலைவர்களுக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் காலை விருந்தளித்து அவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அச்சமயமே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறிய முக்கிய கருத்துகள் வருமாறு:-

கடந்த வருடம் இதே காலத்தில் கிழக்கில் வாகரைக்குச் செல்லவேண்டும் என்று எம்மிடம் அனுமதி பெற்றே அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் அங்கு செல்ல வேண்டியிருந்தன. மக்களுக்குத் தேவையான மருந்துப் பொருள்களை அங்கு எடுத்துச் செல்லவும் அனுமதி பெறவேண்டியிருந்தது. ஆனால் இந்த வருடம் அதே காலத்தில், தாங்கள் அங்கு என்ன அபிவிருத்தி வேலைகளைச் செய்யலாம் என்று தங்களிடம் கூறுமாறு எங்களைக் கேட்கும் நிலைக்கு அந்த அமைப்புகள் வந்துள்ளன. அத்தகைய வழமை நிலையைக் கிழக்கில் ஏற்படுத்தியிருக்கின்றோம்.

அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் என்றெல்லாம் இங்கு அதிகம் பேசுகின்றனர். அத்தகைய ஒரு முக்கிய உரிமையை - தமது நிர்வாகிகளையும் பிரதிநிதிகளையும் தாங்களே வாக்குகள் மூலம் தெரிவுசெய்யும் பிரதான ஜனநாயக உரிமையை - கிழக்கு மக்களுக்கு நாம் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம்.

**அரசியல் தீர்வே இலக்கு; ஆனால்....**

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே எமது இலக்கு.

ஆனால் பயங்கரவாதத்துக்கு அந்த வழியிலேயே - இராணுவ வழியிலேயே - தீர்வு காண்போம்.

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணும் எத்தனத்துடனேயே கிழக்கைப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டு அங்கு ஜனநாயகத் தேர்தல்களை நடத்தினோம்.

அதே செயன்முறை வடக்கிலும் முன்னெடுக்கப்படும்.

பயங்கரவாதத்துக்கு நாம் அடிபணிய மாட்டோம். அதை ஒழிக்கும்வரை நாம் ஓயமாட்டோம். அரசோ, அமைச்சரவையோ அந்த நடவடிக்கையை இனி இடைநிறுத்த முடியாது.

தெற்கில் பயங்கரவாதிகள் குண்டு வைப்பார்கள், எச்சரிக்கையாக இருங்கள் என்று நாம் மக்களை அறிவுறுத்தி வந்தோம்.

**பத்திரிகைகள் சுட்டிக்காட்ட வேண்டும்**

அவர்களால் வைக்கப்பட்ட மூன்று குண்டுகள் பாதுகாப்புத் தரப்பினரால் மீட்கப்பட்டன. நான்காவது குண்டு ரயிலில் வெடித்துள்ளது. இதனால் அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இத்தகைய தாக்குதல்கள் மூலம் அப்பாவிப் பொதுமக்களைப் பயங்கரவாதிகள் கொலை செய்வது தவறு என்பதை அந்தப் பயங்கரவாதிகளுக்கு ஆதரவான பத்திரிகைகள் கூட சுட்டிக்காட்டவேண்டும்.

இவ்வாறான குண்டுத் தாக்குதல்கள் மூலம் மீண்டும் ஓர் இனக்கலவரத்தை இங்கு ஏற்படுத்துவதே பயங்கரவாதிகளின் நோக்கம். அந்த இலக்கை அவர்கள் எட்ட இடமளிக்க மாட்டோம்.

**விலையேற்றம் தவிர்க்கமுடியாதது**

எரிபொருள் விலையேற்றம் தவிர்க்க முடியாதது. உலக சந்தையின் எரிபொருள் விலை அதிகரிப்பை நாம் கட்டுப்படுத்த முடியாது. இப்போதும் கூட - எரிபொருள் விலை அதிகரித்தும் கூட - விற்பனையாகும் ஒவ்வொரு லீற்றர் எரிபொருளுக்கும் அரசு மேலதிகமாகப் பணத்தைச் செலவிடுகிறது. அரச மானியத்துடனேயே இப்போதும் எரிபொருள் விற்பனையாகின்றது. இதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

கிளிநொச்சிக்குச் செல்லும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்களுக்கும் பயன்படுத்தப்படும் எரிபொருளுக்குக் கூட அரசு மானியம் வழங்குகின்றது. - என்றார் ஜனாதிபதி. (சி)

## தமிழ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷவின் இந்த ஆட்சியில் இந்நாட்டு மக்கள் வாழமுடியாமல் துன்பப்படுகின்றனர். இந்நாட்டு மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு மஹிந்த ராஜபக்ஷவின் கையில் எந்தத் தீர்வுமில்லை.

கிழக்கை ஒருதரப்புப் புலிகளிடமிருந்து கைப்பற்றி அதை மீண்டும் வேறொரு புலியிடம் ஒப்படைத்திருக்கிறார் அவர்.

யாரும் விரும்பாத தேர்தல் ஒன்றை அங்கு நடத்தி அங்கு தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இனக்கலவரத்தை ஜனாதிபதி ஏற்படுத்தியுள்ளார்.

இந்தத் தேர்தலில் அரசு வெற்றிபெற்றது. ஆனால், கிழக்கு மக்கள் தோல்வியடைந்துவிட்டனர். தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் முதலமைச்சுப் பதவி வழங்கப்படும் என உறுதி கூறி, இறுதியில் பிள்ளையானுக்கு முதலமைச்சர் பதவியைக் கொடுத்து, கிழக்கில் இனக்கலவரத்தை ஜனாதிபதி தூண்டியுள்ளார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வை முன்வைக்க அரசு இப்போது பேச்சு நடத்துகிறது. இதற்கான ஏற்பாட்டில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் இந்தச் செயற்பாடு நாட்டுப் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்காது. இந்த நாட்டை சரியான வழியில் இட்டுச் செல்லக்கூடிய ஒரு சரியான அரசை ஜே.வி.பியால் மாத்திரமே உருவாக்க முடியும்.

இந்நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் சரியானதொரு அரசை ஜே.வி.பி. விரைவில் நிறுவும் - என்றார். (அ-சி)

## இந்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கே.இராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதற்கமைய இலங்கை இந்திய எரிபொருள் நிலையங்களில் ஒரு லீற்றர் டீசல் 130 ரூபாவாக விற்பனை செய்யப்படும்.

எனினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிலையங்களில் ஒரு லீற்றர் டீசல் 110 ரூபாவாகவே விற்பனை செய்யப்படும். (அ-02)

## ரயில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிலான மேலதிக விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். (சி)

## ஏறாவூரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதி காரணமாக தமிழ் - முஸ்லிம் பிரதேச எல்லை களில் இருந்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இருதரப்பிலும் இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் தற்போது தங்கியுள்ளன. (அ-02)

## காயமுற்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடையவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைதுசெய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட தமிழர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு, விசேட பொலிஸ் குழுவினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார் என்றும் கூறப்பட்டது. (சி)

## வவுனியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் காலை தனது வீட்டிலிருந்து சென்ற இந்த இளைஞன் வீடுதிரும்பவில்லை என்றும் -

சம்பவ இடத்திற்கு நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் அழைத்துச் செல்லப்பட்ட இந்த இளைஞன் அங்கு வைத்துச் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார் என்றும் -

வவுனியாப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியாப் பொதுவைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# இளைஞனும் குடும்பஸ்தரும் ஆணைக்குழுவில் சரண்

யாழ்ப்பாணம், மே 28

உயிர் அச்சுறுத்தல் காரணமாக இளைஞனும் குடும்பஸ்தரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுச் சரண் அடைந்துள்ளனர்.

மீசாலை தெற்கைச் சேர்ந்த 'வெல்டிங்' தொழில் செய்யும் 21 வயதுடைய இளைஞனும் குப்பிளான் தெற்கைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான 25 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையுமே சரண் அடைந்தவர்களாவர். (1-25)

## நகரப் பகுதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பகுதியில் இருந்து வெளியேறுவதற்கு காலையில் இருந்து 11.30 மணி வரை பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. எனினும் உள்வீதிகளில் நடமாடத் தடை இருக்கவில்லை.

முலவைச் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, கோயில் வீதிச் சந்திச் சுற்றாடல் பகுதி களில் குடும்பப் பதிவு, குடும்பப் படங்கள் பரிசோதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ-1-302)

## கைத் தொலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய குற்றச்செயல்களுக்கும் கையடக்கத் தொலைபேசி இணைப்பே பயன்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரியவந்ததைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புலனாய்வு அமைப்புகளின் தலைமை அதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பொன்றின் பின்னரேஇந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கையடக்கத் தொலைபேசிக்கான புதிய இணைப்புகளைப் பெறுவதற்குத் தற்போது தேசிய அடையாள அட்டை மாத்திரம் போதுமானதாகவுள்ளது. இதன் காரணமாக அத்தகைய தொலைபேசிப் பாவனையும் அதிகரித்துள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் குற்றங்களுக்காகத் தண்டனை விதிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
வாடிக்கையாளரின் நலன்கருதி லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
குறிப்பு:-நீங்கள் அனுப்பப்படும் பொதிகளிற்கு காப்புறுதி உண்டு.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
PHYSICE 2009
ELECTRICITY
ஆரம்பம்: 29.05.2008
TUE, THU:- (6.30 - 7.30) A.M
வழமையான ஆசிரியர்

ஏசியன் கல்வி நிலையம்
மீசாலை
O/L DAY CLASS
மீண்டும் ஓர் புதிய பிரிவு ஆரம்பம்
காலம்:- 02.06.2008 காலை 8.00
நிர்வாகி.

COMPUTER CLASSES
Dip. In Microsoft Office
Dip. In Hardware Engineering
Dip. In Computerized Accounting
(MYOB Quick Book Pro Accpack Tally)
Start on: 31.05.2008
Softview Computer College
55, Arasady Rd, Jaffna.
T.P: 021 2225170

ஏல விற்பனை அறிவித்தல்
தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையில் 30.04.2007 இற்கு முன்னர் அடகு வைத்து 30.04.2008 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஏலவிற்பனை திகதி: 28.06.2008 சனிக்கிழமை காலை 9 மணி
இடம் : தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி கிளை
141, VMK கட்டடம் கண்டி வீதி, சாவகச்சேரி.
ஏல விற்பனையை இரத்துச் செய்யும்/ ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.
NSB
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு - 03.
சார்பாக
முகாமையாளர், சாவகச்சேரி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org